JL
R65m21,N11VD.
M26.16.11
181763

3 SEP 1926
MAD...

Regd. No. M. 916

# THE VEDANTA DIPIKA

# வேதாந்த தீபிகை.

அக்ஷய௵,
1925—1926.
ஸம்புடம் 16.



ஆவணி௴
AUGUST
ஸஞ்சிகை 11

பத்ராதிபர். }
கார்யதர்சி. } ர. ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார், எம்.ஏ.

## விஷய ஸூசிகை.

1. பத்ராதிபரின் குறிப்புகள்.— 225

2. ஆசார்யோபகாரம்.—
ஸ்ரீ. உ.வே. தாதாசார்யர். பி ஏ, பி. எல். ஸ்ரீவைகுண்டம். 229

3. பகவதாராதனமும் ஸாளக்ராமசிலையும்.—
ஸ்ரீ. உ.வே. நெடுந்தெரு ஸ்ரீநிவாஸாசார்யர். 234

4. 5. கடிதங்கள்.— 241

6. அபிமானமும் பஹுமானமும்.—ஸ்ரீ. உ.வே. ஸ்ரீசைலதாதாசார்யர். 251

7. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம் (தமிழ் மொழிபெயர்ப்புடன்);—
ஸ்ரீ. உ.வே. மஹாமஹோபாத்யாய சே. நரஸிம்மாசார்யர். 9

Office:—2/11. Adiappa Mudaly Street, Purasawalkam
K. R. Press, Madras.
வர்ஷச் சந்தா ரூ. 3—0—0] [ஸஞ்சிகை 1-க்கு அணா 6.

பாதி விலை! **ஒரு மாதம் வரை** பாதி விலை!!



அசல் விலை ரூ 14.
பாதி விலை ரூ. 7.

22-காரட். ரோல்டு கோல்டு கை கெடியாரம். 10 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயிருக்கும், இக்கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் ஒவ்வொரு கடியாரமும் ஒரு பட்டுப் பட்டையுடன் அனுப்பிவைக்கப்படும்.

☞ ஸ்வான் ஹவுஸ், தபால்பெட்டி, நெ. 508,
பி. டி. மதராஸ்.

---

# இனாம்! இனாம்!!




இச்சமயம் தவறாதீர்கள்!! சிலநாளைக்கு மாத்திரம்!!

உலகமெங்கும் ப்ரஸித்திபெற்ற தாராலீவர் ஜேக்கட் லீவர் கடியாரம் விலை ரூ. 5-0-0 உள்ளது. உள் டையலின்மேல் ஐந்துவருஷம் உத்திரவாதம். காலத்திற்கு சரியான மணியை காட்டக்கூடியது. இக்கடியாரத்தை ஆர்டர் செய்கிறவர்களுக்கு ஒரு "C" டைம்பீஸ் இனாமாகக்கொடுக்கப்படும். இச்சமயம் தவறுதீர்கள். சில நாளைக்கு மாத்திரம். கடியாரம் ஒன்றுக்கு விலை ரூ. 5-0-0 முந்துங்கள்.

விலாசம்:— காப்டன் வாச் கம்பெனி,
தபால்பெட்டி 265 மதராஸ்.

ஸ்ரீ:.

[illegible]

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர் } ஆர். ஸ்ரீநிவாஸ ராகவ அய்யங்கார், எம். ஏ.
கார்யதர்சி }

ஸம்புடம் 16.] அக்ஷய வருஷம், ஆவணி [illegible] [ஸஞ்சிகை 11.

[illegible]

[ஸ்ரீபாகவதம் 1-9-29.

ஸ்ரீ:.

## பத்ராதிபரின் குறிப்புகள்.

### மஹாவீரவைபவ ஸ்தோத்திர விமர்சம்.

[முன் தொடர்ச்சி.]

இப்படிக்கீழ் மூன்று வாக்யங்களினால் பரத்வத்தை நிரூபித்தருளி மேல் ப்ரயோஜநாந்தரபரர்களும், ஸ்வயம் ப்ரயோஜனபரர்களுமான தேவதைகளின் ப்ரார்த்தனைக்கு இணங்கித் தன்னுடைய மேன்மையைக் கொஞ்சமேனும் பாராமல் இந்தப்பூலோகத்தில் அவதரித்தருளின ஸௌலப்ய விசேஷத்தை அருளிச்செய்கிறார்—'[illegible]' இத்யாதியால். பத்துமுகங்களையுடைய ராவணனால் பீடிக்கப்பட்ட தேவதைகளினுடைய கூட்டத்தினால் ப்ரார்த்திக்கப்பட்ட தசரதனுடைய குமாரனாக அவதரிக்கையை உடையவராகிய என்று அர்த்தம்.

'ஸ ஹி தேவைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபி: | அர்த்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணு: ஸநாதந:' என்று மஹர்ஷியும் இந்தச்சேராச் சேர்த்தியின் விசேஷத்தைகாட்டி யருளினார். அவதரித்த

வன் யார்? ப்ரார்த்தித்தவர்கள் எவர்கள்? அவதரித்த இடம் எது? அவதரித்துச் செய்யவேண்டும் கார்யம் எது? இவை ஒவ்வொன்றும் ஸாதாரணமாய் ஸம்பவிக்கக்கூடாதிறே. தேவதைகளினுடையதிவ்ய லோகம் எல்லாம் நரகம் என்னும்படியாகக்கூடிய மேன்மையை உடைய லோகத்தில் ஸர்வோத்க்ருஷ்டனாய் விளங்குமவனைத் தங்கள் கார்யம் ஆகும்வரையில் காலைப்பிடிப்பாரும், கார்யம் ஆனவாறே எதிரம்புகோத்து நிற்பாருமான தேவதைகள் ப்ரார்த்திக்க, அவர்கள் ஒருவராலும் ஜயிக்கமுடியாத ராவணனைக் கொல்லுவதற்காக அந்தத்தேவதைகள் தாமும் ஹவிர்ப்பாகம் வாங்கும்பொழுது மூக்கைப்பிடித்துக்கொள்ளும்படி ஹேயதையை உடைய இந்தப் பூலோகத்தில் ஒரு மனுஷ்யனுக்கு பிள்ளையாகப் பிறக்கும்படியிறே ப்ரார்த்தித்தது. வஸுதேவர் தேவகிக்கு ஸ்ரீக்ருஷ்ணன் இடத்தில் இருந்த ப்ரும்மபாவனையும் புத்ரபாவனையும் இல்லாமல் கேவலம் புத்ரபாவனை மாத்திரமே தசரதனுக்கு இருந்தமையால் 'ஊாஶாஙிஷாவ' என்றும், 'வாஜேண விஶோவ்ந' என்றும் அருளிச்செய்தார். பகவான் ஸர்வ பலப்ரதனேயாகிலும் தன் ஆச்ரிதர்கள் ப்ரார்த்திக்கும் பலனையே கொடுப்பது. தசரதன் ஸ்ரீராமனைக் கேவலம் புத்ரனாகப் பாவித்ததினால் அந்த புத்ரோத்பத்தியினால் நிவ்ருத்தியாகக்கூடிய சரமருணத்தை மாத்திரம் போக்கடித்தமை அருளிச்செய்யப்பட்டது. பகவான் என்று கொஞ்சமேனும் நினைக்காமையினால் அப்படிப்பட்ட ப்ரும்மபாவனையினால் உண்டாகக்கூடிய மோக்ஷம் கிடைக்கவில்லை. இவ்வர்த்தத்தை ஸ்ரீகுலசேகரப்பெருமாளும்,

'முன்னொருநாள் மழுவாளி சிலைவாங்கியவன் தவத்தை முற்றும் செற்றாய்
உன்னையும்உன் அருமையையும் உன்மோயின்வருத்தமும்ஒன்றாகக்கொள்ளாது
என்னையும் என்மெய்யுரையும் மெய்யாகக்கொண்டுவனம் புக்கவெந்தாய்
நின்னையேமகனாகப்பெற பெறுவேனேழ்பிறப்பும் நெடுந்தோள்வேந்தே'

என்றருளிச்செய்தார். இப்படியே சக்ரவர்த்தித்திருமகனை வாசலில் யஜ்ஞத்திற்குக் காவலாக வைத்துவிட்டுத் தாம் உள்ளே சென்று யஜ்ஞத்தைச் செய்த விச்வாமித்திரரைக் கம்பனும்

'வேண்டுவகொண்டு வேள்விமேவினன் காண்டகுகுமாரரை காவல்மேவியே'

என்று பரிஹஸித்தான். சப்பாத்திக்கள்ளிக்கு ரோஜாச்செடியால் வேலி வைத்தாப்போலே இருந்தது மஹரிஷி உட்சென்று யாகம் செய்தது. காண்தகு - காண்பதற்கு தகுதியான, யஜ்ஞாதிகளின் பலமாகப் பார்க்கக் கூடியவனேயிறே, பகவான் ஸித்ததர்மமாயிற்றே, அதைவிட்டு யஜ்ஞத்தை எதற்காகச்செய்தான் என்று தாத்பர்யம்.



பகவானை யதாவத்தாக அறிந்து அவனை அனுபவித்தது கௌஸலையாகையினால் அத்தை 'கௌஸல்யா ஶுஶுபே தேந புத்ரேணாமித தேஜஸா' என்றருளிச்செய்தார். 'அமிததேஜஸா' என்பதினால் பரத்வசின்னமான லக்ஷணங்களுடன் ஸேவை ஸாதித்தது விவக்ஷிதம்.

'நாந்தகம் சங்கு தண்டு நாணொலிச் சார்ங்கம் திருச்சக்கரம் ஏந்து பெருமையிராமனை'

என்று பெரியாழ்வார் அருளிச்செய்திருக்கிறாரிறே. மஹர்ஷியும்,

'கௌஸல்யா ஜநயத்ராமம் ஸர்வலக்ஷண ஸம்யுதம்'

என்கிற இடத்தில் 'ஸர்வலக்ஷண' சப்தத்தால் இதை ஸூசிப்பித்தான்.

'முனிதன்வேள்வியை கல்விச்சிலையால் காத்தானூர்' என்று கலியன் அருளிச்செய்ததைத் திருவுள்ளம்பற்றி 'கௌஶிகஸ்ய க்ரதுத்ராயக கௌஶிகாய' என்று ஸங்க்ரஹித்தருளினார்.

இப்படிச்சில வாக்யங்களினால் பகவானுடைய ஸௌலப்யத்தை நிருபித்தருளி பிராட்டியின் ஸம்பந்தத்தினால் ஏற்படும் பரதேவதாத்வத்தை அருளிச்செய்கிறார். ச்ருதியிலும் 'ஸ்ரீயை தேவோ தேவதா ஸ்ருதே' என்று ஓதப்பட்டது. 'ஐச்வர்யம் ஹி தத்தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா' என்றும், 'ஸீதா பதிர்நய ஸூக்ஷ:' என்றும் மஹர்ஷியும் அருளிச்செய்தான். 'வணு' இத்யாதி சூர்ணிகையால் பிராட்டி இதுவரையில் இதரர்களைக் கடாக்ஷிக்காததினால் அவர்கள் தனுஸ்ஸை வளைக்கமுடியவில்லை என்பதும், அந்த ஸதஸ்ஸில் நிற்கும்பொழுது மேல்நின்று பிராட்டி கடாக்ஷிக்க அந்தக் கடாக்ஷத்தின் விசேஷத்தினால் ராமன் தனுஸ்ஸை வளைக்கும்படியாயிற்று என்பதும் த்யோதிதம். இப்படிப் பிராட்டியின் கடாக்ஷம் ஏற்பட்டதை பெரியாழ்வாரும்,

'இக்குநிறைபுகழாளன் தீவேள்விச் சென்றநாள்
மிக்கபெரும் சபைநடுவே வில்லிறுத்தான் மோதிரம் கண்டு'

என்றருளிச்செய்தார்.

இப்படிப்பிராட்டியின் ஸம்பந்தம் ஏற்பட்டபிறகே பகவான் பரதைகாந்திகள் தொழக்கூடிய நிலைமையை அடைகிறான், அதற்குப்பிறகுதான் அவனுக்கு விசேஷ சோபை உண்டாகிறது என்பதைத் திருவுள்ளம்பற்றி ஸர்வஸத்வ மனோஹரமான திருக்கண்களை இங்கு ஒரு சூர்ணிகையால் வர்ணித்தருளுகிறார்— 'வணுகாகிரண' என்றாரம்பித்து. பூர்வர்களும் 'வேதாந்தாஸ்ஸர்வ விஜ்ஞாநஸூக்ஷ்மஸித்தாந்தாவலி யதாதவீஷ்டாஸ்ஸர்வஸாக்ஷி'

என்றார்கள். 'ஸ்வாஜ்ஞா ஹ்யாம்ஸோ படிவரி வரம் ஸ்வஹ தஷிடி:' என்னப்பட்டதிறே. இப்படிப் பிராட்டியின் கடாக்ஷம் பட்டவாறே இவனுடைய திருக்கண்கள் விகஸித்தமை விவக்ஷிதம். அன்றிக்கே பகவானும் தான் வில்லிறுத்ததும் தன்னுடைய பராக்ரமத்தைப் பார்க்கப்பிராட்டிமேல் நிற்கிறாளோ என்று எறிட்டுப்பார்க்க அவளைக்கண்ட ஸந்தோஷத்தின் மிகுதியினால் கண்கள் மலர அந்த அழகை வர்ணித்தருளுகிறாராகவுமாம். புண்டரீகத்தைப் பகவானுடைய திருக்கண்களுக்கு ஸத்ருசமாக்கும்பொழுது ஜாத்யேகவசனமாயிருக்கிறது என்பதை விசதப்படுத்திக்கொண்டும் பகவானை ப்ரத்யக்ஷமாகப்பார்த்த ஆழ்வாரும்

'கருமாணிக்கமலைமேல் மணித்தடம் தாமரைக்காடுகள்போல்
திருமார்வு வாய் கண்கையுந்தி காலுடையாடைகள் செய்யபிரான்'

என்றனுஸந்தித்ததை ஜ்ஞாபகப்படுத்திக்கொண்டும் 'ஸ்வணாரீக வத' என்றருளிச்செய்தபடி. 'கப்யாஸம்' இத்யாதி ச்ருதியின் அர்த்தமும் அருளிச்செய்யப்பட்டதாகிறது. கவிஸமயத்தில் கண்களை ஒரு தாமரைப்பூவிற்கு த்ருஷ்டாந்தமாகச் சொல்லுவது ஏற்பட்டிருந்தபோதிலும் ஸாக்ஷாத் த்ரஷ்டாவான ஆழ்வாருடைய வர்ணனமே ஸரி என்று அதைப் பின்பற்றினபடி. 'ஜ்ஞாம தத கலம் நிதம் ஜம் வநாதி தாயஸ்ய வ்ஸாஜயோ தக்ஷ ஸோ:' என்னப்பட்டதிறே. 'கட்டுரைக்கில் தாமரையுன்பாதம் கையொவ்வா' என்றருளிச்செய்ததை திருவுள்ளம்பற்றித் திருக்கண்களின் அழகே தாமரைக்காடுகளின் அழகைவிட விஞ்சியிருக்கும் என்பதைக்காட்டுவதற்காக 'ஸ்ரவணாக' என்னும்பதம் என்றறியத்தக்கது. 'தாமரைக்காடு மலர்க்கண்ணொடு' என்று திருவாசிரியத்திலும் அருளிச்செய்யப்பட்டதிறே.

இப்படிப் பிராட்டியின் கடாக்ஷம் பெற்று அத்தால் பரதேவதை என்று நிஷ்கர்ஷிக்கப்பட்டபோதிலும் ராமசப்தம் ஸாதாரணமாயிருந்தமையால் அந்தக்குறையும் தீரப் பரசுராம கர்வபங்கம் செய்தமையை அருளிச்செய்கிறார்—'ஸ்துகோடி' என்றாரம்பித்து. இதற்குமேல் வாக்யத்தில் நம்முடைய பாவம் வீணாகாதது என்பதை தெரிவிப்பதற்காக பரசுராமனுடைய புண்யலோக கமன சக்தியை நிராகரித்தமை அருளிச்செய்யப்பட்டிருக்கிறது.

ஆக இதுவரையிலாக ஸ்ரீராமாயணத்தில் பாலகாண்டார்த்தம் ஸங்க்ரஹிக்கப்பட்டு அதில் ப்ரதிபாதிதம் என்று மஹர்ஷிக்கு அபிப்ரேதமான குணவிசேஷத்தை 'வாரஜெலஷ' என்று கண்டரவேணா அருளிச்செய்தாராயிற்று. ஸ்ரீமச்சப்தப்ரதிபாதகமிறே பாலகாண்டம். அது பரதத்வ நிர்த்தாரணத்தில் ப்ரதானமிறே. அத்தை இப்படி நிரூபித்தாராயிற்று.

(இன்னும் வரும்.)

# ஆசார்யோபகாரம்.

(ஸ்ரீ. உப. வே. தாதாசார்யர். பி ஏ, பி. எல். ஸ்ரீவைகுண்டம்.)

(தொடர்ச்சி.)

ஜீவாத்மா ஈச்வரனுக்கு வேண்டியவன். அவருக்காகவே ஏற்பட்டவன். அவருக்கு கைங்கர்யம் செய்வதேஅதன் ஸ்வபாவம். அதிலேயே ஜீவாத்மாவுக்கு ரஸாநுபவம். அதில்தான் ஸுகம். ஆனால் இப்படி ஈச்வர கைங்கர்யத்தில் ஜீவனுக்குச் ஸுகமிருக்கிறதென்பது நமக்குத் தெரியவில்லை. இப்படித் தெரியாமலிருப்பதற்குக் காரணம் அபபேர்ப்பட்ட ஜ்ஞானம் நம்மிடத்தில் மறைந்திருக்கிறது. ஜன்மாந்தரத்தில் நாம்செய்த கர்மத்தால் அந்த ஸுகம் நமக்குத் தெரியவில்லை. இந்த ஜ்ஞானமறைவு நீங்கி நாம் ஈச்வரனுக்குக் கைங்கர்யம் செய்வோமானால், அதனால் அளவிடமுடியாத ஸந்தோஷம்உண்டாகும். இப்படிப்பகவானிடத்திலேயே இருந்து அவனுக்குக் கைங்கர்யம் செய்துகொண்டு நித்யமாகப் பரிபூர்ண ஸுகாநுபவம் பண்ணவிடாமல் நம்முடைய ஜன்மாந்தர பாபம் நம்மைத் தடுக்கிறது. நம்முடைய தன்மையையும் நமக்கு ஏற்பட்ட ஸுகத்தையும் மறந்து திரும்பவும் திரும்பவும் ஜன்மஜராமரணாதி துக்கபரம்பரையை அனுபவிக்கிறோம். அப்படியல்லாமல் எம்பெருமானுக்கு நித்ய கைங்கர்யம் செய்து, அதனால் உண்டாகும் ஸுகத்தை நித்யமாயனுபவிப்பதைத்தான் நம்முடைய ஸம்ப்ரதாயத்தில் மோக்ஷமென்று சொல்லுகிறார்கள். இப்படி நாமனுபவிக்க வேண்டிய மோக்ஷமானது நம்முடைய ஜன்மாந்தர பாபத்தால் நமக்குக் கிடைக்கவில்லை என்று பார்த்தோமே, அந்தபாபம் எப்படித்தீரும் என்றால் அது இரண்டுவிதம் அனுபவத்தால் தீரவேணும். அல்லது அந்தப் பாபங்களுக்கு நாம் ப்ராயசித்தம் செய்து தீரவேணும். அனுபவித்துத் தீரும் என்றால் நாம் ஒவ்வொரு ஜன்மத்திலும் ஒவ்வொரு தினத்திலும் செய்கிற பாபம் கணக்கிலடங்கக்கூடியதில்லை. ஒவ்வொரு நாளுக்கிப்படியானால், ஒரு ஜன்மத்தில் எவ்வளவு பாபம் இம்மாதிரி எத்தனை ஜன்மம் நடந்து சென்றிருக்கிறது? ஆகையால் நம்முடைய பாபத்துக்குக் கணக்கேயில்லை. இப்படி நமக்குச் சேர்ந்திருக்கிற பாபங்களில் ஒவ்வொன்றுக்கும் எவ்வளவோ ஜன்மம் எடுத்துப் பாபமனுபவிக்க வேண்டியதாயிருக்கிறது. அப்படி எடுக்கிற ஒவ்வொரு ஜன்மத்திலும் நாம் திரும்பவும் பாபம் செய்கிறோம். இப்படிப்பட்ட பாபங்களை அனுபவித்துத் தீர்த்துவிடலாமென்பது முடியாது. ஆகையால் ப்ராயச்சித்தம் செய்து தீர்த்துவிடலாமென்று

நினைத்தாலோ ஒருபாபத்துக்குச் சொல்லியிருக்கிற ப்ராயச்சித்தம் செய்ய வேணுமானால் நமக்கு ஐச்வர்யமும் கிடையாது. ப்ராயச்சித்தம் செய்ய வேண்டிய வழியும் தெரியாது. இந்தக் காலத்தை உத்தேசித்து நியமத்துடன் ப்ராயச்சித்தம் செய்ய ஸௌகர்யமும் கிடையாது. ஒரு பாபத்துக்கு இவ்வளவு அஸௌகர்யம் இருக்குமானால் நம்முடைய கோடிக்கணக்கான பாபத்துக்கு எப்படி நம்மால் ப்ராயச்சித்தம் செய்யமுடியும்? ஒருவிதத்திலும் முடியாது. நமக்கு ஆயுஸ்ஸும் போதாது. இதற்குமேலே நாம்செய்தபாபம் தெரிந்தால் அந்தப் பாபத்திற்கு என்ன ப்ராயச்சித்தமென்று சாஸ்திரங்களைக் கொண்டறிந்து அந்த ப்ராயச்சித்தம் செய்யலாம். ஆனால் ஜன்மாந்தரங்களில் இன்னபாபம் செய்திருக்கிறோமென்றே நமக்குத்தெரியவில்லை. அப்படியிருக்க நாம் எப்படி ப்ராயச்சித்தம் செய்வது? ஆகையால் ப்ராயச்சித்தத்தைச் செய்து பாபத்தைத் தீர்ப்போம்என்பதும் நம்மால் முடியாத கார்யம். பாபம் தீர்ந்தால் ஒழிய நமக்கோ மோக்ஷம் கிடையாது. இவ்விதமாக நமக்கு ஒருவிதத்திலும் கிடைக்காத மோக்ஷத்தை பற்றி நாம் வீணாக ப்ரயாஸப்பட வேண்டாம். நமக்குச் சாஸ்திரத்தை அனுஷ்டிக்கவேணு மென்கிற அவச்யமுமில்லை. சாஸ்திரத்தை அனுஷ்டிப்பதால் நமக்கு என்னபலன்? நமக்கோ ஒருக்காலும் மோக்ஷமில்லை. லோகம் முழுவதும் பாபிகளாகவேயிருக்க அவர்கள் சாஸ்திரானுஷ்டானம் பண்ணுவதாலும் மோக்ஷம் அடைய வழியில்லாமலிருக்க இந்தச் சாஸ்திரங்களால் தான் என்ன ப்ரயோஜனம்? ஒவ்வொருவனும் தன்மனம்போனபடியெல்லா மிருக்கலாம். இவன் எப்படி இருந்தபோதிலும் அதனால் கெடுதியில்லை. இவனுக்கோ மோக்ஷம் ஒருகாலும் கிடையாது. இப்படிக் கர்மத்தை யனுபவிப்பதாலும் ப்ராயச்சித்தம் பண்ணுவதாலும் மோக்ஷமில்லை என்றால் பின்பு மோக்ஷமடைவதற்கு எதுதான்வழி? ஈச்வரன்தானாக நம்முடைய பாபத்தை க்ஷமித்து நம்மிடம் கிருபைசெய்து நமக்கு மோக்ஷம் கொடுத்தால்தான் உண்டு. அவன் அப்படி தன் கிருபையாலேமட்டும் மோக்ஷம் கொடுப்பானானால் பரமதயாளுவான ஈச்வரன் நம்மை இவ்வளவுகோடிஜன்மம் எடுத்துக் கஷ்டப்படும்படி வைத்திருக்கமாட்டான். வெகுஜன்மங்களுக்கு முன்னமேயே இந்த உலகத்திலுள்ள ஸமஸ்த ஜீவராசிகளுக்கும் தன் கிருபையாலேயே மோக்ஷம் கொடுத்திருப்பான். இப்போது இந்த உலகமே இராது. ஆனால் ஈச்வரன் பரமதயாளுவே. அவன் ஏன் நமது பாவத்தை காண்பிக்கவில்லை என்றால் இப்போது ஈச்வரன் நம்மிடத்தில் ரொம்பவும் கோபத்தோடு இருக்கிறான். ஏனென்றால் நாம் அவனுடைய கட்டளைப்படி நடக்கவில்லை. அவன் கட்டளை என்னவென்றால்,

ச்ருதிஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே।
ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ



“ ச்ருதியும் ஸ்ம்ருதியும் என்னுடைய கட்டளை. எவன் அவைகளை மீறி நடக்கிறானோ அவன் எனக்கு சத்ரு ” என்று தானே அருளிச்செய்தான். நாம் ஈச்வரனுக்கு த்ரோஹியானபடியாலும் அவனுடைய ஆஜ்ஞையை (கட்டளையை) நடத்தாததாலும் ஈச்வரன் நம்மிடத்தில் கோபமாக இருக்கிறான். அவன் கர்மானுகுணபலப்ரதனாகையாலே நம்முடைய பாபத்துக்கு தகுந்தபடி நமக்கு தண்டனை விதித்து திரும்பவும் திரும்பவும் ஜனனமரணங்களை கொடுக்கிறான். இப்படியானால் அவன் கோபத்தைத்தணிப்பது எப்படி? ஈச்வரனை நாம் வசீகரணம் பண்ணுவது எப்படி? வசீகரணம் செய்தாலல்லவோ அவன் நம்முடைய பாபத்தை க்ஷமிப்பான், அதுதவிர வேறு கதியில்லை. இப்படி இவனை வசீகரணம் செய்வதற்கு நமது பூர்வாசார்யர்கள் பரமகிருபையாலே ஒருவழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதாவது சரணாகதிதான். இதுதான் நமக்கு ஸாத்யமான உபாயம். இதையே ஸ்ரீபாஷ்யகாரர்,

‘ தஸ்ய ச வசீகரணம் தச்சரணாகதிரேவ ’

என்று அருளிச்செய்தார். ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனும்,

‘ ப்ரபதனாதிபேத்யேஷாம் ந விசேஷ: காலகேஹா நிஜபதம் ’

என்று அருளிச்செய்தார். சரணாகதி செய்தவனைத் தவிர, மற்றவனுக்கு பெருமாள் மோக்ஷம் கொடுக்கிறதில்லை. இதுவே நம்முடைய பூர்வாசாரியர்கள் விசேஷமாக கைப்பற்றின ஓர் உபாயம். இதுதவிர பக்தி மார்கம் என்கிற ஓர் உபாயமுமுண்டு. அது நமக்கு ஸாத்யமில்லாத ரொம்பவும் சிரமமான வழி. அதைப்பற்றி நான் இந்த வியாஸத்தில் எழுதவில்லை.

இப்படி சரணாகதியென்றால் என்ன? அதற்கு அதிகாரமென்ன? அது எப்படி செய்யவேண்டும்? எப்படி இந்த அல்பமான ஒரு வியாபாரத்துக்காக ஈச்வரன் நம்முடைய அளவில்லாத பாபத்தை க்ஷமிக்கிறான்? இதில் நமக்கு என்னமாய் விச்வாஸம் ஏற்படும்? என்பதை கவனிக்கவேண்டும். சரணாகதியென்றால் ஒருவன் ஈச்வரனைப்பார்த்து ‘ அப்பா நான் மகாபாபி, எவ்வளவோ அபராதங்களை செய்துவிட்டேன், அவைகளை போக்கடிப்பதற்கு எனக்கு ஒரு வழியுமில்லை, நான் உனக்கு எப்போதும் கைங்கர்யம் பண்ணி அந்த ரஸத்தையே அனுபவிக்கவேணும், என் மேல் உனக்குள்ள கோபத்தை மறந்து என்னை நீ சேர்த்துக்கொள்ள வேண்டும், உன்னைத்தவிர இது செய்யக்கூடியவர் வேறில்லை, நீ கைவிட்டால் நான் கதியற்று கெட்டுப்போய்விடுவேன், ஆகையால் ஸர்வலோக

சரண்யா! என்றால் அனுஷ்டிக்கமுடியாத ஏதோ பக்திமார்கம் என்று சொல்லுகிறார்களே அந்தப் பக்தி ஸ்தானத்தில் நீயே நின்றுகொண்டு நான் பக்திசெய்ததாகவே பாவித்துக்கொண்டு என்னை உன்னிடம் நித்யகைங்கர்யம் செய்வதற்காக கிருபைசெய்து சேர்த்துக்கொள்ளவேண்டும்' என்று கெஞ்சிகேட்டுக்கொண்டால் ஈச்வரன் மகாகிருபாநிதியானபடியாலே உடனே மனமிரங்கி நம்மை காப்பாற்றுகிறான். இதுதான் சரணாகதி என்பது.

இந்த சரணாகதிக்கு அதிகாரி யார் என்றால் மோக்ஷத்தில் ஆசையுள்ள எவரும் மிருகமாகயிருந்தாலும் மனுஷ்யனாகயிருந்தாலும் பக்ஷியாகயிருந்தாலும் இதற்கு அதிகாரிதான். இந்த உபாயம் பிராமணரல்லாதார்க்கும் உண்டு. மோக்ஷத்தில் ஆசையுடைய யாரும் இதில் இழியலாம். இதை எப்படி செய்யவேணுமென்றால் இது மூன்றுவிதமாக உள்ளது. மகா ஜ்ஞாநிகளாய் சரணாகதியின் ஸ்வரூபத்தையும் அங்கங்களையும் நன்றாய் அறிந்திருந்தும் தத்வநிஷ்டையையுடைய மகா ப்ராஜ்ஞர்கள்தானே நேரில் ஆசார்யனை அனுஸந்தித்துக்கொண்டு பகவானிடம் பிரார்த்தித்து கேட்கலாம். இதற்கு ஸ்வநிஷ்டை என்றுபெயர். இவ்வளவு யோக்யதை இல்லாதவர்கள் அதாவது சரணாகதியின் அங்கங்களில் நல்ல தெளிவான ஜ்ஞாநமில்லாவிட்டாலும் நம்மையும் பகவான் காப்பாற்றுவார் என்கிற பெரிய நம்புதலும் அந்த காரியம் அவனைத்தவிர இன்னொருத்தரால் நடத்தமுடியாது என்கிற எண்ணமும் இவனுக்கு ஸம்ஸாரத்தில் எவ்வித ஸுகமிருந்தபோதிலும் அலுப்பும் உடையவர்கள், ஆசார்யனிடமிருந்து பகவானை கெஞ்சுகிறவழியை நன்றாகக் கற்றுக்கொண்டு ஏற்கனவே உபதேசமாகியிருக்கிற சரணாகதி மந்த்ரத்தைச் சொல்லி ஸாங்கமான பரஸமர்ப்பணம் அதாவது பக்தியோக ஸ்தானத்திலிருந்து காப்பாற்றவேணுமென்று கேட்டுக்கொள்ளுகிறது. இதற்கு உக்தி நிஷ்டையென்றுபெயர். ஸ்வநிஷ்டைக்காரருக்கு இந்த விஷயங்களில் ரொம்பவும் தெளிவிருக்கும். உக்தி நிஷ்டைக்காரருக்கு இந்த தெளிவு கொஞ்சம் குறைவு. ஸம்ஸாரவருத்தத்திலும் பெருமாளை அறிந்து அவனை நம்புவதிலும் அங்கங்களிலும் அங்கியிலும் வித்யாஸமே கிடையாது. இதில் மஹாவிச்வாஸம் நம்புதல் என்கிற விஷயம் ஸாமான்யமாக எல்லோருக்கும் ஏற்படாது. மஹானுபாவர்களான ஸதாசார்யர்களுடைய விசேஷ கடாக்ஷமிருந்தால்தான் இந்த மஹாவிச்வாஸம் ஜனிக்கும். இதிலும் ஸுலபமானவழி வேறொன்றுண்டு. அதற்கு ஆசார்யநிஷ்டை என்றுபெயர். ஒரு மேலான உத்தியோகஸ்தனிடம் ஒருவன் தனக்கு ஓர் உத்யோகம் வேணுமென்று அபேக்ஷித்தால் தான் நேரில போய் கேட்கலாம். ஆனால் அந்த மேலான உத்தியோகஸ்தனுக்கு இவனிடத்தில் கோபமிருக்குமானால் இவனை அங்கீகரிக்கமாட்



டான். ஒருக்கால் இவன் கேட்கிற மாதிரியிலிருந்து அங்கீகரித்தாலும் அங்கீகரிக்கலாம். அப்படி தானே நேரில்போய் அந்த உத்யோகஸ்தனை கேட்பதைக்காட்டிலும் அந்த உத்தியோகஸ்தனுக்கு சிநேகிதனான ஒருவன் இந்த மனுஷ்யனுக்காக அந்த உத்தியோகஸ்தனிடம் மனம்கொண்டு சிபார்சுசெய்தால் இந்த மனுஷ்யனிடம் அந்த உத்தியோகஸ்தனுக்கு கோபமிருந்தாலுங்கூட, தன் அத்யந்த ஸ்நேகிதன் சிபார்சுசெய்யும்போது அதை தட்டமுடியாமல் அந்த மனுஷ்யனுக்குவேலைபோட்டுக்கொடுக்கிறான். அதேமாதிரி தாம் நேரில் ஈச்வரனைப் போய் பிரார்த்திக்கமுடியாதவன் ஈச்வரனுக்கு ரொம்பவும் வேண்டியவரான 'ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்' ஜ்ஞானியானவன் எனக்கே ரொம்பவேண்டியவன் என்றும் 'மத்பக்தபக்தேஷு ப்ரீதிரப்யதிகா மம' எனக்கு என்னுடைய பக்தபக்தனிடம் அதிகமான ப்ரீதியுண்டு' என்று பகவான் திருவுள்ளப்படி நல்ல ஈச்வரபக்தனான ஒரு பாகவதோத்தமனை நாம் ஆசார்யனாக வரித்து 'நீர்தான் என்னை பெருமாளிடம் சிபார்சுசெய்து என்னிடம் பெருமாளுக்குள்ள கோபத்தை ஆற்றி என்னை அங்கீகாரம் செய்யும்படி செய்துவைக்கவேணுமென்று பிரார்த்தித்தால் அந்த ஆசார்யன் பகவானிடம் தானே சரணாகதி செய்து தன்னுடைய சிஷ்யனுக்கு மோக்ஷம் கொடுக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறான். அதன்பேரில் சரணாகத வத்ஸலனான ஈச்வரன் இந்த ஆசார்யனுடைய ப்ரார்த்தனையை தலைக்கட்டிவைத்து அந்த சிஷ்யனை அங்கீகாரம்செய்துகொள்ளுகிறான். 'ஸித்த்யதி வா ந வேதி ஸம்சய: ஸ்யாத் அச்யுதஸேவிநாம் ந ஸம்சயோऽஸ்தி தத்பக்த பரிசர்யாரதாத்மநாம்' ஈச்வரனை ஆச்ரயிக்கிறவர்களுக்கு கார்யஸித்தி உண்டோ இல்லையோ என்று ஸந்தேஹமிருக்கலாம். ஈச்வரபக்தனை ஆச்ரயிக்கிறவர்களுக்கு ஸித்தியில் ஸந்தேஹமேயில்லை. பின்னும் இந்த ஆசார்யநிஷ்டைக்கு இன்னொரு விசேஷமுண்டென்றும் அடியேனுடைய புத்திக்குத்தோன்றுகிறது. ஒரு குழந்தை வியாதியாயிருக்கிறது. அதற்கு வயது மூன்று மாதம். அதன் கஷ்டத்தைப் பார்த்து ஸஹிக்கமுடியாத தாயார் திருப்பதி எம்பெருமானை உத்தேசித்து 'பகவானே! இது ஜன்மாந்திரத்தில் என்ன பாபம் செய்ததோ, இப்போது வியாதியால் கஷ்டப்படுகிறது. அந்த பாபத்தை நீர்தான் க்ஷமித்து குழந்தையை ஸௌக்கியப்படுத்தவேணும், நான் உன் திருவடிவாரத்தில் வந்து குழந்தையை ஸேவிக்கச்செய்கிறேன் என்று ஏதோசொல்லி பகவானை ப்ரார்த்திக்கிறாள். உடனே அந்தக்குழந்தை ஸௌக்யமடைகிறது. இதை அநேக இடங்களில் நாம் பார்த்திருக்கிறோம். ஆஸ்திகராயுள்ளவர்கள் இது பெருமாளுடைய கார்யமென்றே



OF THE REGI…
…FD 1926

ஒப்புக்கொள்ளவேண்டும். இப்படி தாயார் பிரார்த்தித்த மாத்திரத்தில் ஈச்வரன் அந்தக் குழந்தையின் பாபத்தைப்பொறுத்து குழந்தைக்கு க்ஷேமம் கொடுக்கிறானென்றால ஒரு ஜீவனுடைய ஜனனமரணத்துக்குக் காரணமான பாபத்தை பொறுக்கவேணுமென்று ஒரு ஆசார்யன் சிஷ்யனுக்காக ப்ரார்த்தித்தால் அந்த பாபத்தை ஈச்வரன் கட்டாயம் க்ஷமிப்பான். ஜன்மத்துக்குக்காரணம் பாபம், வியாதிக்கு காரணம் பாபம். 'ஜந்மாந்தர க்ருதம் பாபம் வ்யாதி ரூபேண பாததே' ஜன்மாந்திரத்தில் செய்த பாபந்தான் வியாதியாய் படுத்துகிறது.

இவைகளில் சிசுவினுடைய ஜ்ஞானமாவது ப்ரார்த்தனையாவது இல்லாமல் அந்த சிசுவினிடத்தில் அக்கரைப்பட்ட தாயினுடைய பிரார்த்தனைக்காக பகவான் வியாதிக்குக் காரணமான பாபத்தை க்ஷமிக்கிறான். இதே மாதிரி அந்த சிசுவினுடைய ஜ்ஞாநமும் பிரார்த்தனையும் இல்லாமல் சிசுவுக்கு வேண்டியவனான ஆசார்யனுடைய பிரார்த்தனைக்காக அந்த சிசுவுக்கு இனிமேல் ஜனனமரணங்கள் ஏற்படுவதற்கு காரணமான பாபங்களை ஏன் க்ஷமிக்கமாட்டான், கட்டாயம் க்ஷமிப்பான்.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ:.

## பகவதாராதனமும் ஸாளக்ராமசிலையும்.

(ஸ்ரீ. உப. வே. நெடுந்தெரு ஸ்ரீநிவாஸா சார்யர்.)

தேவபூஜை (திருவாராதனம்) என்பது வைஷ்ணவர்கள் அவைஷ்ணவர்கள் எல்லோரும் அவச்யம்செய்ய வேண்டிய முக்யமான கார்யம். ஏனென்றால், இந்த லோகத்துக்கு பகவான்தான் யஜமானன். அவர்தான் இந்த ஜகத்தை உண்டுபண்ணியும் அழித்தும் வருகிறார். 'தைவாதீநம் ஜகத்ஸர்வம்' என்று தெய்வத்தின் ஆக்ஞையால் தான் இந்தபூமி அசையாமலிருப்பது சமுத்திரம் கொந்தளித்து உலகத்தை மூழ்க அடிக்காமலிருப்பது, காற்றுவீசுவது, சந்திரசூரியர்கள், உதயமாகி வெளிச்சம் கொடுப்பது, மழை பெய்வது, விதைமுளைப்பது,பயிர்பச்சை தளிர்த்து பலன்களைக் கொடுப்பது, இதுமுதலான எல்லாக்கார்யங்களும் நடைபெறுகிறது. அப்படிப்பட்ட லோகத்தில் மரஞ்செடி, புல்பூண்டு,ஈ எறும்பு,நாய் நரி, முதலிய ஜன்மங்களில் நம்மைப் பிறப்பிக்காமல் நல்ல ஸங்கதிகளைத் தெரிந்துகொள்வதற்கும், பலகார்யங்களைச் செய்வதற்கும், கஷ்டங்களைப் போக்கிக்கொள்வதற்கும், தகுந்த உயர்ந்த மனுஷ்ய ஜன்மத்தை நிரம்ப தயவுள்ள பகவான் நமக்குக்கொடுத்திருக்கிறார். அப்படிப்பட்ட ஜன்மத்தை அடைந்த நாமும் நமக்குக்கிடைத்த



அறிவை வீணுக்கிக்கொள்ளாமல்,எத்தனையோ உயர்ந்த படிப்புகளைப்படித்து அறிவைப் பெருக்கிக்கொண்டு பலதொழில்களையும் செய்துகொண்டு 'நஹி க்ஷுதிதமனஸி ஜாது தியஃ ஸ்புரந்தி!' என்று ஓயாமல் பாடுபடுகிறோம். இப்படி நாம் என்னபடித்துப் பாடுபட்டாலும் 'உதரநிமித்தம் பஹுக்ருத வேஷம்' என்று வயிற்றுக்காக வேண்டிய பொருளுக்கும் வீண் பெருமை முதலியதுகளுக்குமாக ஆகிறதேயொழிய இதனால் நம்மில் பண்டிதர் பாமரர் ஏழை பணக்காரர் கீழ்ஜாதி மேல்ஜாதி என்றும் பேதமில்லாமல் யாராவது ஒருவர் ஒருவித குறைவு, துன்பம், கவலை, பயம் த்வேஷம் முதலியதில்லாமல் சுகமாயும் சந்தோஷமாயும் இருப்பதாய்த் தெரியவில்லை. யாரும் ஒருவிதத்தில் படுகிறகஷ்டம் முதலியதுகளுக்கு எல்லையில்லை. இப்படி துன்பப்படுவது இந்தலோகத்தில் மாத்திரமில்லை. நாம் செய்யுங் கார்யங்களால் இறந்தபிறகும் பரலோகத்தில் 'நவத்வாரே புரே தேஹீ நரக மஹாவ்யவஸாயிகம்' என்கிறபடி பலவித நரகயாதனைகளையும் கர்ப்பவாஸம் முதலான துக்கங்களையும் அனுபவிக்க ஆளாயிருக்கிறோம். இப்படி இந்த ஜன்மத்திலானாலும் மறுஜன்மத்திலாவது சுகப்படலாமோ என்றால், மறுபடி இந்த மனுஷ்யஜன்மம் கிடைப்பதென்பது நிச்சயமில்லை. கிடைத்தாலும், இம்மாதிரியே இருந்துவிடலாம். ஆதலால் இக்கஷ்டங்கள் ஒழிவதற்காக நாம் முக்கியமாய் செய்யவேண்டிய தென்னவெனில் நமக்கு எஜமானனாய் பகவான் ஒருவரிருக்கிறார், நாம் அவருக்கு அடிமைக்காரர்கள். நல்லது பொல்லாததுகளை நமது வேலைக்குத்தக்கபடி பகவான் கொடுக்கிறார். நாம் எப்போதும் அவருடைய ப்ரீதியைத் தேடவேண்டிய வேலைகளைச் செய்யக்கடமைப்பட்டவர்கள். அந்த வேலையும் அவர் நடத்திவைக்க நாம் நடத்துகிறோம். என்றிம்மாதிரியான எண்ணம் எந்தவேலை செய்யும்போதும் நமக்கிருக்க வேண்டும். இந்தவிஷயம்நம்மில் ஒருவருக்காவது 'அனுபவத்தில் கிடையாது. எதையும் நாமே நமது சாமர்த்தியத்தாலும் வேண்டியவர்களின் ஒத்தாசையாலும் நடத்துகிறோ மென்றிருக்கிறோம். 'இது மிகவும் தகாதகாரியம்' தெய்வத்தின்மகிமை தெரிந்து அதின் சிந்தை நமக்கு வேண்டாம் அது நமக்கு இந்த உடம்பையும் கண் காது முதலிய இந்திரியங்களையும் கொடுத்திருக்கிறதே. இதுயாரால் செய்யமுடியும். ரோகமுள்ள உடம்பை ஸ்வஸ்தப்படுத்தினதற்கும், தோஷமுள்ள கண்முதலியதை குணப்படுத்தினதற்கும் வைத்தியரை நாமெவ்வளவோ கொண்டாடுகிறோம். இவர்களால் இந்தமாதிரி இந்திரியங்களை கொடுப்பதற்கும், சாவைத்தடுப்பதற்கும் குழந்தை இல்லாதவர்களுக்குசந்ததியுண்டு பண்ணுவது முதலியதுகளுக்கும் முடியுமா? இதுவெல்லாம் செய்துவருகிற ஆச்சரிய சக்தியுள்ள தெய்வத்தைநாமெப்போதும் மறக்கக்கூடாது. ஆதலால் தெய்வசிந்தை வைதிகம் லௌகிகம் முத

லிய எந்தக்காரியங்களிலும் நமக்கிருப்பதுடன் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திரூபமான நமது கார்யங்களால் அதைச் சந்தோஷப்படுத்தியே நாம் அபிமதங்களைப் பெறவேண்டும். நமது எல்லா நித்யகர்மங்களும் அவன் ப்ரீதிக்காகிலும் கிருஹத்தில் அவனுடைய அர்சா உருவத்தைவைத்து ப்ரதக்ஷிணம் நமஸ்காரம் அபிஷேகம் அர்ச்சனை நைவேத்தியம் முதலியதுகளால் அவனை ஆராதிப்பதும் தப்புக்கள் நேர்ந்தால் அவனிடம் முறையிட்டு கொள்ளுதல் முதலியதுகளைச் செய்துவந்தால் அவன் திருப்தனாகி அபிமத பலன்களை யளிப்பான். அதற்காக அத்தெய்வபூஜையை யாரும் செய்துவரவேண்டும். ச்ருதி ஸ்ம்ருதி புராணாதிகளிலும். 1. "நம்மால் சமர்ப்பிக்கப்படுகிற பதார்த்தங்களைத் தான் கடாக்ஷிக்கிறத்தினாலேயே ஸ்வீகரித்து அதினாலேயே நமக்கு நல்லபலன்களை கொடுப்பதற்கு நமக்கு இஷ்டமான மூர்த்திகளில் ஆவிர்பவிக்கும் ச்வபாவமுள்ள நாராயணனை ஆராதியுங்கள், 2. கிருஹஸ்தன் தினந்தோறும் இஷ்ட தெய்வங்களையாராதித்து இஷ்டகாமியங்களைப் பெறவேண்டும். 3. எவர்கள் பரிசுத்த மனஸ்ஸுடன் விஷ்ணுவை யாராதித்து வருகிறார்களோ அவர்கள் மறுபிறப்பை யடைகிறதில்லை. 4. விஷ்ணுவின் ஆராதனத்தைவிட புண்யமாயும் வைதிகமுமான கர்மம் இடையாது. ஆதலால் ஆத்யந்தமில்லாத அவனைபஜுதின மாராதித்து வரவேண்டும்" என்று தேவபூஜையின் ஆவச்யகதை வெளிவாய் சொல்லப்படுகிறது. இதை அனுஷ்டிக்காவிடில் 5. விஷ்ணுபூஜை செய்யாதவனுக்குச் செய்யும்தானம் அவன் செய்யும் ஹோமம் தபஸ்ஸு அத்யயனம் எல்லாம் சவாலங்காரத்தைப்போல் பயனற்றது. 6. தாயைப்போல் ரக்ஷிக்கிறவரும் மூன்று லோகத்தின் சிருஷ்டி ஸ்திதி

1. [illegible] 1-155-1.

2. [illegible]

3. [illegible]

4. [illegible]

5. [illegible]

6. [illegible]



ஸம்ஹாரங்களைச் செய்கிறவருமான விஷ்ணுவை யாராதியாதவன் மீளாநரகத்திற்கு ஆளாவான். 1. அறியாமை சோம்பல் இவைகளால் தேவார்ச்சனஞ்செய்யாமல் புஜிப்பவன் மீளாநரகத்திற்காளாகி மறுபடி பன்றியாய் பிறப்பான். 2. விஷ்ணுபூஜையில்லாத ஊரிலோ வீட்டிலோ ஜலபானங்கூடச் செய்யக்கூடாது. அந்த க்ஷணகாலம் தங்கவும் கூடாது என்று பல ப்ரத்யவாயமும் பொதுவாய் எல்லாருக்கும் சொல்லப்படுமானால் வைஷ்ணவர்களுக்கு இந்த திருவாராதனத்தின் ஆவச்யகதையைச் சொல்லவும் வேண்டுமோ? வைஷ்ணவர்களாவது அர்த்த பஞ்சகத்தின் உண்மையை அறிந்தவர்களும் பஞ்ச ஸம்ஸ்காரத்தால் ஸம்ஸ்கரிக்கப்பட்டவர்களும் விஷ்ணுவின் ரூபத்தை மனதிலும், நாமத்தை வாயிலும், நைவேத்தியத்தை வயிற்றிலும், அவன் திருவடி தீர்த்தத்தை தலையிலும், தரிப்பது முதலியவையுள்ளவர்கள். இவர்களுக்குப் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்வதும் இவ்வாராதன ப்ரதானத்தை முக்கியமாய் உபதேசிப்பதற்காகவே என்று தோன்றுகிறது. எப்படியென்னில் பகவானை பூஜிப்பதாயிருந்தால் அவருக்கு நாம் வேலைக்காரர்கள் என்னும் எண்ணத்துடன் செய்யவேண்டும். அந்த எண்ணம் எப்போது உண்டாகிறதோ 3. பகவானுக்குத் தாஸனென்னும் எண்ணமுண்டானால் பகவானுடைய அடையாளங்களால் தன் உடம்பில் அடையாளம் செய்துகொள்ளவேண்டுமென்கிற வசனப்படி பகவத்சின்னங்களை தரிப்பதற்காக முதலில் தாப ஸம்ஸ்காரத்தையும் 4. பகவானை யாராதிப்பவன் ஊர்த்வபுண்ட்ரங்களை தரிக்கவேண்டுமென்றிருப்பதால் அதற்காக புண்ட்ர ஸம்ஸ்காரத்தையும் தன் எஜமானனுடைய பெயரை வஹிப்பதும் தாஸலக்ஷணமாகையால் அதற்காக நாம ஸம்ஸ்காரத்தையும் தனக்கும் பகவானுக்குமுள்ள அடிமைத்தனம் எஜமானத்தனம் முதலிய உறவு இருவர்களின் ஸ்வரூபஸ்வபாவங்களைக்காட்டுவதும், பகவானுடைய எந்த மூர்த்தியையுமாராதிப்பதற்குப் பொதுவானதும் 5. மந்திரங்களில் இதற்குமேல்பட்டதுமில்லாததுமான அஷ்டாக்ஷரம் முதலிய

1. [illegible]

2. [illegible]

3. [illegible]

4. [illegible]

5. [illegible]

மந்திரங்களைப் பெருவதற்காக மந்திர ஸம்ஸ்காரத்தையும் செய்து வைஷ்ணவன் முக்கியமாய் செய்யவேண்டிய இந்த திருவாராதனக்ரமத்தின் உபதேசத்தை ஐந்தாவது ஸம்ஸ்காரமாக நமக்கு ஆசார்யாள் செய்கிருர்கள். இது இப்படியிருக்க, இக்காலத்தில் உபநயனம் விவாஹமுதலிய ஸம்ஸ்காரங்கள் எதற்காக ஏற்பட்டிருக்கிறதென்பதுகளை தெரியாமலும் நினைத்த காலங்களில் மந்திரம் க்ரியை முதலியவைகளைக் கவனியாமலும் கேவலம் 1. உத்ஸவமாத்திர ப்ரதானமாய் ஆய்விட்டதே அதுபோல் பஞ்ச ஸம்ஸ்காரமும் நமக்காய்விட்டது. சிஷ்யன் எப்படி இருந்தாலும் அவனை திருத்தி நல்ல சங்கதிகளைத் தெரிவிக்கவேண்டியது தயைவாய்ந்த குருவின் கடமையாகும். அதுவும் வெகு இடத்தில் கிடையாது. முதலில் அவர்களே தெரிந்துகொண்டிருக்கிருர்களோ என்னவோ. உபநயநாதி கர்மாக்கள் முன்னது பின்னதாயிருந்தாலும் 4-5 நாளைக்காவது ஸ்வரம் அக்ஷரம் ஸரியாயில்லாவிட்டாலும் ஸந்தியாவந்தனுதிகளைச் சொல்லிவைப்பதும் அதை ஆசாரமுமாகக் கண்டிருக்கிரும். ஸமாச்ரயணம் ஆனபிறகு மந்திரத்தை ஸ்மரிப்பதுகூடக்கிடையாது. தெரிந்தாலல்லவோ ஜெபிக்கிறதற்கு. யார் சொல்லிகொடுக்கிருர்கள்? மந்திரத்தை மூன்றுதரம் உபதேசிக்கவே அவகாசமில்லையே. இப்படிக்கிருக்க ஆராதனத்தைப்பற்றிய சிந்தையேது. இப்படிக்கிராமல் வைஷ்ணவர்களாகிய நம் அஷ்டாக்ஷராதி ஜபாதிகளை விடாமல் ஜபித்து வருவதுடன் திருவாராதனத்தையும் அவச்யம் அனுஷ்டித்து வரவேண்டும். அதில் கிருஹஸ்தன் பஞ்சயஜ்ஞ பரனுயிருந்து கொண்டு. ஆதித்யன் அம்பிகை விஷ்ணு கணபதி மாஹேச்வரன் இவர்களை யாராதித்து வரவேண்டு மென்றும், அதையும் காலை ஹோமஞ்செய்தவுடன் செய்யவேண்டுமென்று சொல்லுவதெல்லாம் மற்ற மதஸ்தர்களுக்கே. வைஷ்ணவர்கள் 2. மற்ற தெய்வத்தை நமஸ்கரிக்கவேகூடாது என்றிருப்பதாலும் பரதெய்வமாகிய விஷ்ணுவையே ஆராதிக்கவேண்டும். அதையும்இவன் பஞ்சகால பராயணனுதலால் மூன்ருவது காலமாகிய இஜ்யாகாலத்தில்நடத்தவேண்டும்.இவ்வாராதனத்தில் கும்பாதிகளில் ஆவாஹனஞ்செய்து பூஜிப்பது ஆபத்கால விஷய மாதலாலும், 3. விஷ்ணுவின் பிம்பமில்லாத வீடு மயானத்துக்குச் சமானமென்று நிந்திக்கப்படுவதாலும் 4. விக்ரஹத்தைப் பூஜிப்பதில் நமக்கு அதிக ப்ரீதியுண்டாக இடமா யிருப்பதாலும் விக்ரஹாராதனஞ் செய்வதுச்

1. [illegible]
2. [illegible]
3. [illegible]
4. [illegible]



ச்ரேஷ்டம். அந்த விக்ரஹமும், 1. வீட்டில் மண்சிலை மரம்முதலியவைகளால் செய்யப்பட்ட விக்ரஹ மிருக்கக்கூடா தாதலால் 2. தங்கம் வெள்ளி தாம்ப்ரம் முதலானதுகளால் செய்யப்பட்டதும் பார்வைக்கு அழகானதாயும் 3. குருவின் அனுக்ரஹத்தாலேயோ பாம்பரா க்ரமத்தாலோயே நாம் விரும்பாமலேயே தனக்குத்தானுய் ஒருவரால் கொடுக்கப்பட்டதிலுலேயோ யாசனத்திலுலேயோ கிடைத்ததா யிருக்கவேண்டும். அதில் லோஹம் என்னும் புத்தியைச்செய்யக்கூடாது. செய்தால் நரகமுண்டு. ஷாட்குண்ய பரிபூர்ணனை பகவான் நம்மால் செய்யப்பட்டிருக்கும் விக்ரஹத்தில் இதேமாதிரியாய் அப்ராகிருத திருமேனியுடன் யெழுந்தருளி யிருப்பதாய் நினைத்துக்கொண்டு பயத்துடனும் ப்ரீதியுடனு மாராதித்துவர வேண்டும். ஆனுலும் விக்ரஹாராதன விஷயத்தில் ப்ரதிதினம் ஆவாஹனம் முதலியது செய்யவேண்டியதும் ஒருவேளை பூஜை நின்ருல் மறுபடி ப்ரதிஷ்டை செய்யவேண்டியது முதலிய பல நிர்பந்த மிருப்பதால் ஸாளக்ராமத்தில் ஆராதனஞ்செய்வது நல்லது. ஸாளக்ராம சிலைக்கு 4. ஆவாஹனம் ப்ரதிஷ்டை ஸம்ப்ரோக்ஷணம் முதலியது கிடையாது. 5.உடைசல் விரிசலுள்ளதாக இருந்தாலும் சக்கிரம் மாத்திரமிருந்தால் போதும். பூஜித்தால் போகத்தையும் மோக்ஷத்தையு மளிக்கும். 6. அனுசார ஸ்பர்சாதிகள் நேர்ந்தால் பால்திருமஞ்சனம் செய்தால் போதும். ஸாளக்ராம சிலையின் மகிமை.

ஸாளக்ராமசிலையென்பது ஸாலம் என்னும் மரங்கள் அடர்ந்திருப்பதால் ஸாளக்ராமமென்னும் பெயர்பூண்ட மலையிலுண்டானதும் வஜ்ரகீடமென்னும் புழுவால் துவாரம் செய்யப்பட்டும் சக்ரம் முதலிய ரேகையுள்ளதும் கண்டகீ நதியில் அகப்படக்கூடியதுமான ஒருவித சிலை. சிலர் ஸாளிக்ராமம் ஸாளிக்ராவா என்பார்கள். அதெல்லாம் ஸரியல்ல. ஸாளக்

1. [illegible]
2. [illegible]
3. [illegible]
4. [illegible]
5. [illegible]
6. [illegible]

ராமசிலையென்பதே ஸரி. இதுவும் பகவானுடைய அர்ச்சா உருவங்களிலொன்று. இதில் பகவான் எப்போதும் வாஸஞ்செய்கிறார். இதன் மஹிமைக்கு எல்லையில்லை. ஸாளக்ராமத்தில் 14-லோகங்களும் ஸர்வதேவர்களும் வஸிக்கிறார்கள். ஸாளக்ராமபூஜை செய்யுமிடத்துக்கு ஒரு யோஜனை தூரம் வரையில் கோடி புண்யதீர்த்தங்களிருக்கின்றன. அதின் சமீபத்தில் செய்யப்படும் ஜபம் ஹோமம் ச்ராத்தம் யஜ்ஞம் எல்லாம் கோடிமடங்காகும். இறப்பவன் முக்தியையடைவான். ஸாளக்ராம பூஜைசெய்பவனுக்கு மறுபிறப்பில்லை. அதின் துவாரத்தைக் காண்பவர்களின் பிதிர்க்கள் கல்பாந்தகாலம் ஸ்வர்க்கத்திலிருப்பார்கள். ஸாளக்ராமத்தைப் பார்த்தாலும் தொட்டாலும் அதின் தீர்த்தத்தைப் பருகினாலும் மானஸம் காயிகம் வாசிகம் முதலிய பாபங்கள் தொலைந்துவிடும். ஸாளக்ராமத்தைஸேவித்தாலும் அதற்கு அபிஷேகம் செய்தாலும் ஸிங்கத்தைக்கண்ட மிருகங்கள்போல் பாபங்கள் பறந்தோடிவிடும். பால் தயிர் நெய் சுத்த ஜலம் இவைகளால் அபிஷேகஞ்செய்பவன் கல்பாந்தகாலம் ஸ்வர்க்கத்தில் வஸிப்பான். என்னுடைய நைவேத்யம் புஷ்பம் பத்திரம் முதலியவைகளைப் புஜிக்கவும் கூடாது. சாளக்ராமத்துக்கு நிவேதனஞ்செய்யப்பட்ட அன்னாதிகளை ஸ்வீகரிப்பதால் வெகு ஜென்மங்களிலேற்பட்ட பாபங்கள் நீங்குவதுடன் பாவசுத்தி பக்தி முதலியதுண்டாகும். என்னுடைய கோடிலிங்கங்களை பூஜிப்பதாலுண்டாகும் பலன் ஒருதரம் ஸாளக்ராமத்தைப் பூஜிப்பதாலுண்டாகிவிடும். ஸாளக்ராம தீர்த்தத்தைத் தினந்தோறும் ப்ராசனஞ்செய்கிறவர்களுக்குப் பஞ்சகவ்யப்ராசனம் சாந்தி பாராயணங்கள் வேண்டுவதில்லை. ஸாளக்ராமத்தைவைத்துப் பாதுகாப்பவன் சர்வதானம் யக்ஞம் பூப்பிரதக்ஷிணம் இதுகளாலுண்டாகும் பலன்களைச் சுலபமாய் அடையலாம். ஸாளக்ராமத்தையாவது அதன் தீர்த்தத்தையாவது மரணகாலத்தில் கண்டுவிட்டால் யமபடர்கள் அங்கு வரமாட்டார்கள் என்று ருத்ரன் சொல்லுவதாய் பாத்மோத்தரம் கூறுகிறது. முதலில் சிலையைப் பரீக்ஷிக்கவேண்டும் நல்லபுண்ணியஞ்செய்திருந்தால் தான் கறுப்பாயும் மழுமழுப்பாயும் நல்லலக்ஷண முள்ளதாயும் கிடைக்கும். இதற்குப் பலலக்ஷணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதைத் தெரிந்தவர்களைக் கொண்டுப்பார்த்து வாங்கிக்கொள்ள வேண்டும் ஸாளக்ராமத்தை விலைக்கு வாங்கக்கூடாது. ஸாளக்ராமத்தை விற்பவன் வாங்குகிறவன் விலைமதிப்பவன் எல்லாரும் நரகத்தில் சேருவார்களென்றிருப்பதால் நல்லதென்பதைத் தெரிந்துகொண்டு விலையாக இல்லாமல் வஸ்திரம் பூஷணம் தான்யம் இவைகளைப் பாரிதோஷிகம்போல் கொடுத்துத்தான் வாங்கிக்கொள்ள வேண்டும். யாகத்தில் ரித்விக்குகள் தக்ஷிணை வாங்கிகொள்ளப்பட்டதென்றிருந்தாலும் குதிரை பூமி வஸ்திரம் பூஷணாதிகளை வாங்கிக்கொள்ளுகிறாப்போல்தான்.

(இன்னும் வரும்.)

# கடிதங்கள்.

## I

## தர்ப்பண விசாரம்.

ஸ்ரீ. உப. வே. வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,—

ஒரே தினத்தில் ஏகதேவதாகமாகிய ச்ராத்வயங்கள் ஸம்பவித்தால் எம்மாதிரி அநுஷ்டிப்பது என்கிற விஷயத்தில் அநேக வித்வான்கள் வேறுபட்ட அபிப்பிராயமுடையவர்களாய் இருக்கிறார்களெனவே இதுவிஷயத்தில் நிர்ணயமான ஸித்தாந்தம், ஏற்படுதல் அனுஷ்டானபரர்களான வைஷ்ணவர்களுக்கு மிகவும் உபயுக்தமாயிருக்கும் ஆகையால் இந்த கடிதமூலமாய் அடியேன் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தி பிறகு பெரியோர்களின் அபிப்பிராயத்தையும் இந்த தீபிகையின் வாயிலாகவே அறியவிரும்புகிறேன். சென்ற குரோதனஹு மார்கழிமீ த்திய தீபிகையில் சொக்கானூர் ஸ்ரீ. உ:ப. வே. பார்த்தசாரதி அய்யங்கார் ஸ்வாமியும் கடிதமூலம் மேல்கண்ட விஷயமாக சில அபிப்பிராயங்களைக்கூறி அதற்குப் பெரியோர்களுடைய பிரமாணபூர்வகவபிப்பிராயத்தை தீபிகாமூலம் வெளியிடும்படி பிரார்த்தித்திருந்தும் பெரியோர்களில் ஒருவராவது அது விஷயமானவபிப்பிராயத்தை காலதுபர்யந்தம் தீபிகையில் வெளியிட்டிருப்பதாகத்தெரியவிலேன். எனவே அடியேனும் அதே விஷயத்தை இத்தீபிகையில் வெளியிட உத்தேசித்தேன். ஒருதினத்தில் இரண்டு சிராத்த ஸம்மேளனம் நடந்த ஹுத்திய துலாஸங்க்ரமண காலத்திலும் மகரஸங்க்ரமண காலத்திலும் நேர்ந்தது என்பதும் அதுவிஷயமாய் அறிந்த பெரியோர்களுக்குள்ளேயும் அனுஷ்டான பேதங்கள் ஏற்பட்டதென்பதும் பத்திரிகைமூலம் யாவரும் அறிந்தவிஷயமாம். இனியும் அம்மாதிரி ஸம்பவங்கள் நேரக்கூடுமாகையால் அதுவிஷயம் சர்சாபூர்வகமாய் வித்வான்கள் ஒரு முடிவுக்கு வருவது மிகவும்நலம். அதற்கு இக்கடிதம் தூண்டுகோலாயிருக்குமென்றே அடியேன் அபிப்பிராயப்படுகிறேன். ஏகதினத்தில் ஏகோத்தேச்யகமான சிராத்தத்வயங்கள் ஒருகர்த்தா அனுஷ்டிக்கக்கூடாது என்பதற்குப் பிரமாணமும் அதன் தமிழ் மொழிபெயர்ப்பும் அதன் கருத்தும் இதனடியில் மிதஜ்ஞனை அடியேனால் வெளியிடப்பட்டிருக்கிறது.

[illegible]

‘[illegible]

[illegible]’

இதன் தமிழ்மொழிபெயர்ப்பு,—

தேவதை ஒன்றாயிருக்கிறதென்கிற காரணத்தினால் ஒருவன் ஒரு தினத்தில் ஒரு தேவதையை உத்தேசித்து இரண்டு ச்ராத்தங்கள் பண்ணக்கூடாது.

என்று எடுத்திருக்கிறரேயன்றி மன்வாதி யுகாதி கிரஹண சங்கிராந்தி சிராத்தாநாம் என்று சங்கிராந்தி பதகடிதமாக எடுக்கவில்லை. மேலும்,

‘ 𑌦𑌰𑍍𑌶𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌾𑌨𑌾𑌂 𑌸𑌂𑌨𑌿𑌪𑌾𑌤𑍇 𑌤𑍁 . 𑌉𑌭𑌯𑍋𑌰𑍍𑌵𑌾
𑌬𑌹𑍁𑌦𑍈𑌵𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌸𑍋𑌦𑌕𑍁𑌮𑍍𑌭𑌵𑌤𑍍 𑌦𑌰𑍍𑌶𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌂 𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌂 𑌵𑌾
𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌕𑌾𑌲𑌵𑌿𑌶𑍇𑌷𑌯𑌂 ।’

என்று கண்டோக்தியாய் சமவிகல்பமாய் பிரதிபாதித்திருக்கிறர்.

இதில் பூர்வபக்ஷம் : ஸ்ம்ருதிவிலோசனக்காரரின் கிரந்தத்திற்கு மேல்கண்ட அபிப்பிராயம் சரியல்ல. எப்படியெனில் அமாவாஸ்யையை அபேக்ஷித்து சங்கிராந்திக்கு அதிக காலத்தில் சம்பவிக்கக்கூடியதான அநியதத்தன்மையுண்டு. எப்படிக்கெனில், ஸூரியன் மேஷாதிராசிகளில் பிரவேசிக்குங்காலம்வருஷத்திற்குஒருமுறைதான் ஆகிறது. ஆகையால் விசேஷண பலத்தினல் ஸங்கிராந்திக்கும் அமாவாஸையை அபேக்ஷித்து அதிக கால ஸம்பவத்தன்மை ரூபமான நியதமின்மை ஏற்பட்டுவிட்டபடியால் அமாவாஸையும் ஸங்கிராந்தியும் ஒன்று சேறுங்கால் அநியத ஸங்கிராந்திதான் கிராஹ்யம். நியதமான அமாவாஸையை விடவேண்டியதுதான். இவ்வபிப்ராயத்தைக் கொண்டுதான் ஸ்ம்ருதிவிலோசன கிரந்தத்தில்,

‘ 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑍇 𑌨 𑌉𑌦𑍍𑌵𑌾𑌹𑌾𑌦𑌿 𑌯𑌾𑌗𑌾𑌦𑌿 𑌗𑍍𑌰𑌹𑌣𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌾𑌨𑌾𑌂 ’

என்று நிஷேதவிஷயத்தில் எடுத்திருக்கிறர். நீக்ஷிதிய க்ரந்தம் எங்களுக்கு ஆதரணீயமல்லவென்றல் அது பிசகு. இதற்கு சித்தாந்தம்,

மேஷாதி விசேஷணங்களையிட்டு சங்கிராந்திகளுக்கு வருஷத்திற்கொருமுறை சம்பவத்தைச்சொன்னல் ஸங்கல்பத்தில் ஒவ்வொரு அமாவாஸைக்கும் ஒவ்வொருமாதம் விசேஷணமாய் சம்பந்தித்திருக்கிறது. எனவே மாஸவிசேஷண பலத்தினல் அமாவாஸையும் வருஷத்திற்கொருமுறை வரக்கூடியதுதான். ஆகையால் பூர்வபக்ஷியின் யுக்தியை அனுஸரித்தும் இரண்டும் துல்யபலங்கள்தான்.

(பூர்வபக்ஷம்) ஒருதினத்தில் இரண்டு சிராத்தங்கள் சேருங்கால் ஒன்றைவிட்டு ஒன்றை யவலம்பிப்பதற்குக்காரணம் நைமித்திகத்வம்தான். ஆகையால் அமாவாஸை சங்கிராந்தி ஸம்யோக காலத்தில் ஸங்கிராந்தி சிராத்தம் நைமித்திகம் ஆகையால் அதை யனுஷ்டித்துக்கொண்டு நித்தியமான அமாவாஸையை விடவேண்டியது நியாயந்தான். ஆகவே,

‘ 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑍇 𑌨 𑌉𑌦𑍍𑌵𑌾𑌹𑌾𑌦𑌿 𑌯𑌾𑌗𑌾𑌦𑌿 𑌗𑍍𑌰𑌹𑌣 𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌾𑌨𑌾𑌂 ’

என்கிற ஸ்ம்ருதிவிலோசன நிஷேதவிஷய வாக்கியமும் ஸங்கதமாய் விடுகிறது என்றல் அதுவும் பிசகு.

(சித்தாந்தம்) ஸ்ம்ருதிவிலோசன க்ரந்தத்தின் நிஷேதவிஷய வாக்யாவசனத்தில்,



‘ 𑌅𑌨𑌿𑌯𑌤𑌸𑍍𑌯 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌯𑌾𑌃 ’

என்று நியதமில்லாமையையே - ஒன்றைவிட்டு ஒன்றை யனுஷ்டிப்பதற்குக் காரணமாக எடுத்திருக்கிறர். ஆகையால் பூர்வபக்ஷிக்கு மூலக்கிரந்த விரோதம் வரும்.

மேலும் பூர்வபக்ஷியின் அபிப்ராயப்படிக்கு நைமித்திகத் தன்மையையே அனுஷ்டேய காரணமாக வைத்துக்கொண்டாலும்,

‘ 𑌨𑌿𑌷𑍇𑌧𑌸𑍍𑌯 𑌨 𑌦𑌰𑍍𑌶𑌵𑌿𑌷𑌯𑌕𑌸𑍍𑌯 ’

என்கிற நிஷேதவிஷய வாக்கியத்தின்படிக்கு அனுஷ்டேயமாய் ஏற்படும் அமாவாஸைக்கு நைமித்திகத்தன்மை இல்லாததினல் கரணமின்மையால் காரியமின்மை என்கிற நியாயப்படிக்கு, நித்தியதர்ச ஸம்யோக காலத்தில் தர்ச ச்ராத்தம் அனுஷ்டிக்கக்கூடாததாக ஆய்விடும். இஷ்டம் என்றல் வசனவிரோதம் வரும்.

(பூர்வபக்ஷம்.) ஒருதினத்தில் ஒருதேவதை யுத்தேசித்த இரண்டு சிராத்தங்கள் சேருங்கால் ஒருகர்த்தா ஒருசிரார்த்தம்தான் பண்ணவேண்டியது. அதற்குக் காரணம் நைமித்திகத்தன்மையும் நியதமின்மையும் இரண்டும் காரணந்தான். ஆகையால், ‘ 𑌨𑌿𑌷𑍇𑌧𑌸𑍍𑌯 𑌨 𑌦𑌰𑍍𑌶𑌵𑌿𑌷𑌯𑌕𑌸𑍍𑌯 ’ என்கிறவிடத்தில் அமாவாஸைக்கு நைமித்திகத்தன்மை யில்லாவிடினும் நித்ய சிராத்தாபேக்ஷயா அமாவாஸைக்கு அதிக காலஸம்பவத்தன்மை ரூபமான அநியதத்தன்மை இருக்கிறதென்றல் இதுவும் (விகல்பத்தை ஸஹிக்கக்கூடியதன்று.)

(சித்தாந்தம்.) நைமித்திகத்தன்மை நியதமின்மை இரண்டு காரணங்கள் என்று சொல்லும் பூர்வவாதியை அடியேன் கேழ்பதாவது, நைமித்திகத்தன்மை நியதமின்மை இரண்டும்சேர்ந்து காரணமா? அல்லது ஒன்றே காரணமா? இரண்டும் சேர்ந்து ‘ 𑌨𑌿𑌷𑍇𑌧𑌸𑍍𑌯 𑌨 𑌦𑌰𑍍𑌶𑌵𑌿𑌷𑌯𑌕𑌸𑍍𑌯 ’ என்கிற விடத்தில் தர்சத்திற்குக்கிடையாது, ஒன்றுதான் காரணமெனில் பூர்வோக்த தோஷங்கள் ஸ்திரமாயிருக்கின்றன. மேலும் ஸ்ம்ருதிவிலோசனக்காரரின் மதவிரோதம். பூர்வபக்ஷி தன்யுக்தியாய் நைமித்திகத்வத்தை காரணம் கல்பிப்பதற்கு பூர்வோக்த விரோதமில்லாமல் பிரமாண பூர்வகமாய் யுக்தி சொல்லவேண்டும். ஆகையால் ‘ 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌵𑌿𑌲𑍋𑌚𑌨 ’ கர்த்தாவின் அபிப்பிராயப்படிக்கு ஆபேக்ஷிக நியதமின்மைதான் முக்கிய காரணமாக ஏற்படுகிறது.

‘ 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌊𑌹𑌨𑍀𑌯𑌂 ’

என்கிறவாக்கிய பர்யாலோசனையினல் நைமித்திக சிராத்தங்களுடைய ஸம்யோக காலத்திலும் ஆபேக்ஷிக நியதமின்மையை ஊஹித்தறிந்து ஒன்றைவிட்டு ஒன்று கொள்ளவேண்டும் என்றேற்படுகிறது. ஒருதினத்தில் ஸமதேவதாக சிராத்த நிஷேத விதிக்கு, அபவாதம் சொல்லுகிற தருணத்தில் ஸ்ம்ருதிவிலோசன மூலம்.

(𑌅𑌸𑍍𑌯 𑌵𑌾𑌰𑌾𑌨𑍁𑌶𑍇𑌹.)

உ-டு. தேவதாபேதே ஶ்ராத்தத்வயம் கார்யம்ச । தத்யதா நித்யதர்ஶஶ்ராத்தம், ஸோத கும்ப மாஸிகாப்திகாநாம், ஆப்திகேந ஸங்க்ராந்தி மாஸிக ஸோத கும்பாநாம், ஸம்யோகே ஸோதகும்பாதி பூர்வம் அநுஷ்டேயம், அநியதத்வாத், ததோ தர்ஶாதி॥

(இதன் தமிழ் மொழி பெயர்ப்பு.)

ஒருதினத்தில் இரண்டு சிராத்தங்கள் வந்தால் அதன் உத்தேச்ய தேவதைகள் வேறுபட்டிருந்தால் இரண்டு சிராத்தங்களையும் அனுஷ்டிக்கவேண்டியது இதற்கு தேவதாபேதம்தான் காரணம். அது எப்படி எனில், நித்திய சிராத்தம் அமாவாஸை சிராத்தம் இதுகளுடன் ஸோத கும்ப மாஸிகாப்திக சிராத்தங்களுக்கும் ஆப்திக சிராத்தத்துடன் சங்கிராந்திமாஸிக சோத கும்பசிராத்தங்களுக்கும் ஒருதின சம்பந்தம் உண்டாகுங்கால், ஸோதகும்பம் முதலான சிராத்தங்கள் முதலில் அனுஷ்டிக்க வேண்டியது. அதற்குக் காரணம் நியதமின்மைதான். பிறகு அமாவாஸை முதலிய சிராத்தம் பண்ணவேண்டியது.

(மறுபடியும் மூலம்.)

உ-டு. யதாதேவ பேதேப்யபி நிமித்தபேதே நைமித்திகாநி கார்யாணி॥

(இதன் அர்த்தம், தமிழ்மொழி பெயர்ப்பு.)

எப்படி தேவதாபேத காரணமாய் இரண்டு சிராத்தங்கள் பண்ணவேண்டியவைகளோ அப்படி நிமித்த பேத காரணத்தைக்கொண்டும் சிராத்தத்வயங்கள் ஒரு தினத்தில் செய்யவேண்டியவைகள், இதில் தேவதைக்யம் பிரயோஜகமன்று, இதற்குப் பிரமாணம்.

(காத்யாயநः) தைவஸாம்யேऽபி நிமித்தாநி ஜாயந்தே நைக வாஸரே ॥
நைமித்திகாநி கார்யாணி நிமித்தாநந்தரம் ததா ॥

நிமித்தங்கள் சமமாயிருப்பதனால் இதற்கு விஷயம் எப்படியெனில்,

தர்ஶே பூர்வாபராஹ்ண ஸங்க்ராந்தி ஸம்பவே ।

என்று ஸ்மிருதிவிலோசன க்ரந்தத்தில் காணப்படுகிறது. பூர்வோக்த வாக்யார்த்த சிந்தனையில் அமாவாஸை கிரகணம் ஸங்கிராந்தி இதுகள் ஏகதினத்தில் சம்பவித்தால் மூன்று சிராத்தங்களும் பண்ணவேண்டியது என்று ஏற்படுவதால் மந்தமதியான அடியேன் அபிப்பிராயம் இந்த அபிப்பிராயம். இந்த ஸ்மிருதிவிலோசன க்ரந்தத்தை யனுஸரித்ததேயன்றி அடியேன் சித்தாந்தமான வபிப்பிராயமன்று. நிஷேதவிஷய வாக்கியத்தில்,

‘ தர்ஶேந ஸஹ பூர்வாதி க்ரஹண ஸங்க்ராந்தி ஶ்ராத்தாநாம் ।

என்றிருப்பதினால் கிரஹணத்தினோடாவது ஸங்கிராந்தியோடாவது அமாவாஸை ஒரு



தினத்தில் சம்பவித்தால் அமாவாஸையை விட்டு கிரஹண ஸங்கிராந்தி சிராத்தங்கள் பண்ணவேண்டியதாக ஏற்படுகிறது.

‘ நைமித்திகாநி கார்யாணி நிமித்தாநந்தரம் ததா ॥

என்பதின்கீழ் அநேக நைமித்திக சிராத்த சம்பந்த விஷயத்தைக்காண்பிக்கும் பிரகரணத்தில்,

‘ யதா தர்ஶே பூர்வாபராஹ்ண ஸங்க்ராந்தி ஸம்பவே ।

என்று வியாக்கியான கிரந்தத்தில் காணப்படுவதால் மூன்று ச்ராத்தங்களும் நைமித்திகங்கள்போலவும் அனுஷ்டேயங்கள்போலவும் ஆபாதமாய்த் தோன்றுகிறது. ஆகையால் இது பூர்வாபர விரோதமாயிருக்கிறது. ஆகையால் இதின் விஷயத்தில் பண்டிதர்களே ஐககண்ட்யம் படுத்தி அர்த்தம் கூறவேண்டியது நியாயம். இம்மாதிரியான ஆக்ஷேப சமாதான பூர்வகமாய் எழுதிக்கொண்டுபோனால் இந்தக்கடிதம் விரியும் என்று நினைத்து மேல்கண்ட விஷயங்களில் அடியேன் நிஷ்க்ருஷ்ட ஸித்தாந்தத்தை சொல்லி இக்கடிதத்தை முடித்துவிடுகிறேன்.

சிராத்தங்கள் நித்தியம் நைமித்திகம் காம்யம் என்று மூன்று பிரகாரங்கள் என்று

ப்ரதாபேऽஹரஹர்தர்ஶே ஶ்ராத்தம் ஸாமாந்யதோ பவேத் ॥
தந்நித்யமுதிதம் ஸத்பிர் நித்யத்வவிதயா ததः ।
ப்ரேதஶ்ராத்தம் ஸபிண்டீகம் ஸங்க்ராந்திக்ரஹணாதிஷு ச ।
ஸம்வத்ஸராதிகம் சைவ வ்ருத்திஶ்ராத்தம் நிமித்ததः ।
திவ்யாதிஷ்வந்தராம் ச த்வாதிஷு யாமாதிஷு ।
ஜ்யேஷ்டேஷு ச யோகேஷு தத்ராத்யம் ஸமுதாஹ்ருதம் ।

என்கிற கார்ஷ்ணஜினி வசனத்தினால் ஏற்படுகிறது. நீதிநீய கிரந்த சிராத்தபேத நிருபண பிரகரணத்தில்,

ஶ்ராத்தத்வயம் தயோர்த்ருஷ்டம் நைமித்திகம் ச பார்வணம் ।
நித்யம் நைமித்திகம் காம்யமிதி ச த்ரிவிதம் ஸ்ம்ருதம் ।

இதி தத்ரைவோக்தம், யதா நித்யம், யதா அஹரஹர் விஹிதம் ஶ்ராத்தம் । அநியதநிமித்தம் ஹி நைமித்திகம் யதா க்ரஹணாதௌ - காம்யநைமித்திகம் காம்யம் யதாபி நக்ஷத்ரவாராதிஷு ।

என்று காணப்படுகிறபடியால் நைமித்திகமெல்லாம் அநியதநிமித்தமென்றேற்படுகிறது.

ஶ்ரீவராஹ ஸம்வாதே,—

ப்ராதஃ காலேது ந ஶ்ராத்தம் ப்ரகுர்வீத விசக்ஷணஃ ॥ நைமித்திகேஷு ஶ்ராத்தேஷு ந கால நியமஸ்ம்ருதஃ । ஸ நிமித்தாநந்தரம் ஶ்ராத்தே கர்தவ்யஸ்ம்ருதஃ ।

என்கிற பிரமாண வசனங்களினால் நிமித்தத்தின் உத்பத்தி காலமே நைமித்திக சிராத்தகாலம். ஆகையால் நிமித்தங்கள் இந்தக் காலத்தில்தான் உதிக்கும் என்றும் வரையறுக்கமுடியாது. ஆகையால் நைமித்திகங்கள் எல்லாம் அநியத புண்ய காலங்களை உடையதாகவே இருக்கும் என்று ஏற்படுகிறது. ஆகையால் ஒரு தினத்தில் ஒரு தேவதையை யுத்தேசித்து இரண்டு நித்ய சிராத்தங்கள் வந்தால் ஒருவன் அதிக காலத்தில் வரக்கூடியதான வரியதன்மை வாய்ந்த சிராத்தத்தை அநுஷ்டிக்க வேண்டியது. நித்ய நைமித்திகங்கள் ஒன்றுசேர்ந்தால் அநியத புண்யகாலத்தையுடைய நைமித்திகம் பூர்வம் பிராப்தமாய் விட்டபடியால் நித்திய சிராத்தத்தை விட வேண்டியது.

ஒருதினத்தில் இரண்டு சிராத்தங்கள் வந்தாலும் உத்தேச்ய தேவதைகள் பேதப்பட்டிருந்தாலும் இரண்டும் நிமித்தபேதங்களை உடையதாயிருந்தாலும் இரண்டு சிராத்தங்களையும் ஒரு கர்த்தா ஒருதினத்தில் அநுஷ்டிக்க வேண்டியதுதான். இதில் பூர்வாபர நியமத்தை அதுகளுக்குள் உண்டான அநியதத்தன்மையையிட்டு வ்யவஸ்தை பண்ணிக்கொள்ள வேண்டியது. ஆகையால் அமாவாஸையும் ஸங்கிராந்தியும் ஒன்று சேருங்கால் அமாவாஸை நித்தியமும் ஸங்கிராந்தி நைமித்திகமுமாக ஆகிறது. நைமித்திக ஸங்கிராந்திக்கு புண்ணியகால நியதி இல்லை. அமாவாஸைக்கு அபராண்ணகாலத்தில் புண்ணியகால நியதி உண்டு. அநியதாம்.) 'ஸதீபஸம்ஹாரத'

என்கிற நியாயத்தினால் அநியத்ய நைமித்திக ஸங்கிராந்தி சிராத்த பூர்வம் அநுஷ்டேயமாய் விடுகிறது. பிறகு அமாவாஸை சிராத்தத்தில் தேவதாபேதமும் நிமித்த பேதமுமில்லாததால் ப்ரஸங்காத் அநுஷ்டேயமில்லாததாய் விடுகிறது. ஆனால் இந்த அபிப்பிராயத்திற்கு தீக்ஷிதீய க்ரந்தம் விரோதமாயிருக்கிறது. ஸ்ம்ருதிஸ்லோசக க்ரந்தமும் அடியேனுக்கு பூர்வாபர விரோதமாய்த் தோன்றுகிறது என்றுமேலே சொல்லியிருக்கிறேன். இவ்விஷயங்களுக்கு பிராமாணங்களும் பூர்வம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் பெரியபண்டிதர்கள் இது விஷயத்தில் பிரமாண க்ரந்தஸங்கதி பூர்வகமாய் ஒரு நிர்ணயத்தை இந்த தீபிகாமூலம் தெரிவித்து அநுக்ரகிக்கப் பிரார்த்திக்கிறேன்.

விஜ்ஞாபகம்

பெ. வ. ஶ்ரீநிவாஸதாஸன்.

ஶ்ரீ:

## கடிதம்.

## 2

வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு, விஜ்ஞாபனம்.:—

குரோதனஸு பங்குனிமீத்திய வேதாந்ததீபிகையின் ஸஞ்சிகையில் 117-வது பக்கத்தில் திண்டிவனம் ஸ்ரீ. உ. வே. சேட்லூர், ஸ்ரீனிவாஸ ராகவாசாரியர் ஸ்வாமி எழுதியஸ்ரீக்ருஷ்ணசரித்திரஸம்பந்தமாக சிலப்ரச்னங்களும் அவைகளின்ஸமாதானங்களும் ப்ரசுரிக்கப்பட்டு அந்த ஸமாதானங்களை மதாந்தரஸ்தர்கள் ஒப்புக்கொள்ளவில்லையென்றும் இருக்கிறது. நம் சாஸ்திரங்களை ஒப்புக்கொள்ளாத பாஹ்ய மதஸ்தர்களுக்கு ஸமாதானம் எழுதத் தயாரில்லை. ஆயினும் அவர்களும் எந்தப்புராணத்தில் இருக்கும் விஷயங்களைக்கொண்டு ப்ரச்னம் பண்ணினார்களோ அதே புராணத்தில் சொல்லிய ஸமாதானங்களைக்கொண்டு திருப்தியடையலாம். இப்பொழுது நம் ஸித்தாந்திகளுக்கே ஸமாதானம் எழுதுகிறோம்.

ஸ்ரீபாகவதம் தசமஸ்கந்தத்தில் 33-வது அத்யாயத்தில் 27, 28, 29-வது ச்லோகங்களால் பரீக்ஷித்து மகாராஜா, "அதர்மத்தைப் போக்கடிப்பதற்காகவும் தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காகவும் அவதரித்த பகவான் தர்மமரியாதையைத் தானேபண்ணுகிறவனாகவுமிருந்தும், உபதேசிக்கிறவனாகவும், காப்பாற்றுகிற வனாகவுமிருந்தும், ஆப்தகாமனான தானே அதர்மமான பரஸ்திரீஸங்கமம் செய்யக்கூடாதே, அதற்கு என்ன அப்பிராயம்? இந்த ஸம்சயத்தைப் போக்கடிக்க வேணும் என்றுப்ரச்னம்செய்ய, அதற்கு சுகமகரிஷி பத்து சுலோகங்களால் ஸமாதானம் சொல்லியிருக்கிறார். அதாவது: சாஸ்திரவச்யனல்லாத ஈச்வரனுக்கு தர்மாதிலங்கனமும், சாஸ்திரார்த்தத்தைப் பராமர்சியாதே செய்கையுமுண்டு. தேஜஸ்விகளுக்கு அவைகள் தோஷமாகாது. எப்படி ஸர்வத்தையும் தஹிக்கிற அக்னிக்குதோஷம் வராதோ அப்படியே அவர்களுக்கும் சமர்த்தர்களுடைய செய்கையை அஸமர்த்தன் செய்யக்கூடாது. க்ஷீரஸமுத்திரத்தில் உண்டான விஷத்தை ருத்திரன் சாப்பிட்டான், அதனால் அவனுக்கு ஒரு தீங்கும் உண்டாகவில்லையே என்று ஒருவன்தானும் விஷத்தை உட்கொண்டால் உடனே அவனுக்கு மரணமுண்டாகும். நியந்தாக்களுடைய வார்த்தை யதார்த்தம். அந்தவார்த்தைக்குத் தகுந்த செய்கையே புத்திமான்களால் செய்யத்தகுந்தது. கர்மவச்யர்களே நல்லத்தை செய்யவேணும் கெடுதலைச் செய்யக்கூடாது. நியமிக்கிறவர்களுக்கு அதில் இஷ்டானிஷ்ட பலன்கள் உண்டாகாது. அதிலும் ஸர்வேச்வரனுக்கு அதனால் ஒரு அனிஷ்டமும் சம்பவிக்காது.

மேலும், ஸர்வாந்தர்யாமியாகையினால் ஜன்மாந்தரங்களில் ரிஷிகளாயிருந்து விசேஷபக்திபண்ணி இப்பொழுது கோபஸ்திரீகளாயிருப்பவர்களுக்கு மோக்ஷங்கொடுக்கைக்காக இசைவித்துத் தன்தாளிணைக் கீழிருந்தும் அம்மான்செய்த செயலாகையாலும், கோபர்கள் தங்கள் ஸ்திரீகள் தங்கள் பக்கத்திலேயே இருக்கிறதாக எண்ணுகிறதாலும் மகரிஷிகள் புராணங்களை ப்ரகாசப்படுத்துவதற்கு முந்தி ஒருவருக்கும் தெரியவிடமில்லாததாலும், லோக ஸங்கிரக விரோதமில்லை.

அப்படியே 51-வது அத்யாயத்தில் ராமகிருஷ்ணர்கள் தேவகீ வஸுதேவர்களைப் பார்த்து 'எங்கள் விஷயத்தில் ஆசையுடனிருக்கும் உங்கள் சமீபத்தில் எங்களுடைய பால்ய, பௌகண்ட, கௌமார, கைசோர வயஸ்ஸுக்களில் இருக்கக்கூடாமல்போய் விட்டதென்று சொல்லியிருக்கிறதாலும், க்ஷத்திரியர்களுக்கு பதினோராவது வயதில் உபநயனம் செய்யவேண்டும் என்றிருந்தாலும் சம்வத்ஸரத்திற்குப் பிறகே வஸுதேவர் கிருஷ்ணனுக்கு உபநயனம் பண்ணிவைத்திருப்பதாலும், உபநயனத்திற்கு முந்தி கோபிகளுடன் கலந்ததானது, காமசார காமவாத காமபக்ஷணங்கள் பாலனுக்கு தோஷமன்றென்று சாஸ்திரங்கள் சொல்லியிருப்பதால் தோஷமாகாது. ஒருவயதிற்குள் சகட, திருணாவர்த்தன் இவர்களை ஸம்ஹரித்தார். கோவர்த்தனமலையை ஒருவிரலாலேயே எழு

நாள் தாங்கினர். இதற்கு ஸதிருசமான காரியங்களை செய்தவனுக்கு இதுகள் ஆச்சர்யமன்று. முன்ஜன்மத்தில் பக்திபண்ணி இந்த ஜன்மத்தில் முக்திபெறவேண்டியவர்களான கோபிகைகளுக்கு தன்னிடம் மனதை சலனமில்லாமல் வைப்பதற்காக இப்படிச் செய்தது. அதற்கு (சிந்தயந்தீயப் பொழுதே மோக்ஷம்பெற்றது உதாஹரணம்) ஸ்வாகந்தத்திலேயே யிருக்கிற பகவான் இவர்களுடைய பூர்வஜன்ம தபஸ்ஸின் பலத்தை கொடுத்தப் பிரகாரம். 'ஆத்மாராமோபி ஸ்ரீரமேஜ' என்று சாஸ்திரமே சொல்லிற்று. இந்தவிஷயத்தில் 'ஸ்ரீநிகமாந்த தேசிகன்' சத்தூஷணியிலும் ஸமாதானம் ஸாதித்திருக்கிறார். (அதாவது) தர்மத்தை அதிக்ரமிக்கிறதும் ஸாஹஸ கிருத்தியமும் பூர்வீகரிடத்தில் காணப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு தேஜோவிசேஷத்தாலே ப்ரத்யவாயமில்லை. தேஜஸ்ஸில்லாதவன் அதைச் செய்தால் துக்கப்படுவான். இத்தாலே ஸர்வேச்வரனை க்ருஷ்ணனுடைய ஸ்வச்சந்த லீலையாலே கோபிகைகளுடைய மோஹனம் விவ்ருதமாயிற்று. பராசரர் முதலான மஹர்ஷிகளாலே பகவானுக்கு இந்த தோஷமானது கர்மவச்யன் அன்றாகையாலே இல்லையென்று சொல்லப்பட்டது. 'காமோ த்வாவ்ருதஃ' என்கிற சாஸ்திரத்தாலே பகவானிடம் தொடர்ந்த ப்ரீதியானது மோக்ஷத்தைக் கொடுக்கிறதென்று சொல்லப்பட்டது. தர்மத்தை ஸ்தாபிக்கைக்காக பிறந்தவர் அதற்கு கலக்கத்தை யுண்டுபண்ணுவது உப்பன்னமாகுமா என்கிற ஆக்ஷேபம் கூடாது, ஸமாதானஞ் சொல்லப்பட்டுப்போனதால்.

வேறு ஸமாதானம். நந்தகோபபுத்திராபிமானத்தை அபிநயம் பண்ணுகிற பகவானுக்கு அவ்வளவு பரியந்தம் வர்ணசாமானுஷ்டான நியமமில்லை. கோபிகைகளும் பகவானையே பர்த்தாவாக அபேக்ஷித்து ஜன்மாந்திரத்தில் விருதம் பண்ணினார்கள். ஆகையால் அவர்கள் தேவாம்ச முள்ளவர்களே. அவர்களுக்கு அப்ஸரஸ்ஸுக்களுக்குப்போலே இதரஸமாகமத்தில் தோஷமில்லை. ஈச்வரனுக்கும் பக்தாளபேக்ஷித்த பலத்தைக் கொடுப்பது தோஷமாகாது. எந்தக்காலத்தில் வசுதேவ புத்திர பாவனைபண்ணினரோ அந்தக் காலத்தில் யதுவம்சத்திற்கு தக்க க்ஷத்திரிய தர்மத்தை அனுஷ்டித்தார் ஸாவதானமாகவே ஸர்வகாலத்திலும் ஸர்வதர்மங்களையும் பண்ணினர். அப்படியே ஸர்வசாஸ்திரங்களிலும் சொல்லப்படுகிறது.

ந மே பார்த்தாஸ்தி கர்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சந ।
நாநவாப்தம் அவாப்தவ்யம் வர்த்த ஏவ ச கர்மணி,

அப்படியே.

க்ருதோதகஃ க்ருதஜபஃ ஹுதாக்நிஸ் ஸந்த்யாம் க்ருதஃ ।
ததஃ க்ருஷ்ணோர்சிதஃ பூர்வாதிஷ்டத மாதவஃ ॥ இதி.

அப்படியே அச்வத்தாமாவினுடைய அஸ்திராக்னியால் கொளுத்தப்பட்ட உத்தரா கர்பத்தினுடைய ஸஞ்ஜீவன ஸமயே பதினாராயிரம் ஸ்திரீகளை விவாஹம் பண்ணி அவைகளோடே கலந்தவனாயும் பிருந்தாவனத்தி லிருக்கிற இடைச்சிகளாலே அனுபவிக்கப்பட்ட யௌவநாரம்பத்தையுடைய பகவான்தானே சொன்னான்.

யதி மே ப்ரஹ்மசர்யம் ஸ்யாத் ஸத்யம் ச மயி திஷ்டதி
அஸ்த்ராஹதம் ததேதஸ்யாம் ஜீவது பாலகஃ ॥ இதி

ஸ்ரீவத்ஸன். முரிச்சாம்பட்டு ரங்கநாதன்,
ஸ்ரீரங்கம்,

186763 சென்னை-600 00



அடியவர்க்கு மெய்யனரிடத்தில் பேரருளாளப் பெருமானைக்காட்டிலும் ஆழ்ந்து ஈடுபட்டாரென்னக் கடவதாயிருக்குமென்று சிலர் அருளிச் செய்வார்கள்.

'கடலன்ன காமத்தராயினும் மாதர் மடலூரார் மற்றையார் மேல்'

என்று தமிழர் கட்டியிருந்த வ்யவஸ்தையை அனுதரித்து நாலுகவிப் பெருமாளாகிய கலியன் பெரிய திருமடலிலே,

'..............................மானேக்கின்
அன்னநடையா ரலரேச வாடவர்மேல்
மன்னுமட லூராரென்பதோர் வாசகமும்
தென்னுரையிற் கேட்டறிவ துண்டதனை யாம்தெளியோம்
மன்னும்வட நெறியே வேண்டினோம்.................'

என்று அருளிச்செய்கையாலே ஸ்ரீதேசிகன் தமிழ்முறையை உபேக்ஷித்து ஸ்ரீராமாயண ப்ரக்ரியையிலே பேரருளாளப் பெருமாள் விஷயத்திலே தம் ஈடுபாட்டை வெளியிட்டருளிச்செய்த,

'வாரத தவ வித்யோதயந்தி யத்வத்
ஸாகர ஸம்ப்ரயாஸ ஸாத்ருகர்ய ஸாணம் ।
வ்யபகத பரிகர்மவார வாணம்
ம்ருகமதபங்க விசேஷ நீலமங்கம் ॥'

(வரந்தரும் பெருமாளே! கரிய மாணிக்கமலைக்கு மாத்ருகை யென்னலாம்படியாய் ஒப்பனையும் சட்டையுமின்றியே கஸ்தூரி குழம்புபோலே அதிக நீலமாகக் காணலுறும் தேவரீரது திருமேனியை பாக்கியாதிகாரனர் ஸேவிக்கப்பெறுகிறார்கள்.) என்கிற ச்லோகத்திலே,

'தம் பத்மதள பத்ராக்ஷம் ஸிம்ஹவிக்ராந்த காமிநம் ।
தந்யாஃ பச்யந்தி மே நாதம் க்ருதஜ்ஞம் ப்ரியவாதிநம் ॥'

(அலர்ந்த தாமரையிதழ் போன்ற திருக்கண்களும் ஸிம்ஹம்போன்ற வீரப்பாடுடைய நடையும் நன்றியறிதல் இன்சொல் மொழிதல் முக்குணங்களும் உடைய எனது நாதனை பாக்கியாதிகாரனர் ஸேவிக்கப்பெறுகிறார்கள்.) என்று பிராட்டி நெஞ்சாறல் பட்டாப்போலே அருளிச்செய்த நிலை ஸ்பஷ்டமாயிருக்கிறபடியே ஸ்ரீதேசிகன் பேரருளாளப்பெருமாள் விஷயத்திலே நாயிகாபாவத்தோடாழ்ந்தநுபவித்ததற்கு நிதர்சகமாக இருக்கிறது என்று சிலர் அருளிச்செய்வார்கள்.

'போகாக்ரா மாத்ராநுபூதிர் விரஹஃ ॥'

(மானஸாநுபவத்திற்கு முன்னும் பின்னுமான தசை மானஸாநுபவமில்லாத ஸந்தாபம்.) விரஹமென்று நிர்ணயித்திருக்கையாலும்,

'வரத ஸததமேவ மே ஹ்ருதயம் ஸந்நிதேயா:'

(வரங்களருளும் பெருமாளே! தேவரீர் ஸர்வகாலமும் (க்ஷணமும் விடாமே) மனதில் ஸாந்நித்யம்பண்ணியருளவேண்டும்) என்று ஸ்ரீதேசிகன் ப்ரார்த்தனை விகவிக்கக் காரணமில்லையாகையாலே கருணைக்கடலான வேழமலைப்பெருமானுடைய மானஸாநுபவமில்லாதொருக்ஷணமும்ஸ்ரீதேசிகனுக்கில்லையாகையாலும் பிரிவில்லது நாயிகா பாவம் எங்கும் இல்லை யாகையால் அவ்விதமாகப் பிரசுரமிட அவகாசமேயில்லையா யிருக்கிறதென்று சிலர் அருளிச்செய்வர்கள். தானான தன்மைமாறி அது அநுபவித்தாலல்லது பெருமையில்லை யென்று சொல்லவிரகில்லை யாகையாலும், அப்படியானால் ஆண்டாள் தானான தன்மைமாறி அநுபவவியாமை கொண்டு பெருமையில்லாதவளாகவடுக்குமாகையாலும், மற்றைய ஆழ்வார்கள் ஆரோபித்துக் கொண்டநுபவிக்கவேண்டிற்றென்றும், இவ்வாண்டாள் தானான தன்மையிலே அநுபவிக்கிறாளென்றும், அதிசயம் சொல்லப்பட்டிருப்பதாலும், நாயிகா பாவாநுபவத்தாலொருபெருமையும், அதில்லாமையால் ஒரு சிறுமையும், உபபாதிக்கப் போகாதென்று சிலர் அருளிச்செய்வார்கள்.

"பக்தி: ச்ருங்காரவ்ருத்த்யா பரிணமதி"

(பக்தியே ச்ருங்காரமாக பரிணமிக்கிறது.) என்னப்படுகையாலே இது பரிணமமாகிறதே ச்ருங்கார மென்றது வாத்ஸல்யாதிகளுக்கும் உபலக்ஷணமாகிறது.

ஸதீவ ப்ரியபர்த்தாரம் ஜநநீவ ஸ்தநந்தயம்"

(அன்புடைய பர்த்தாவைக் கற்புக்கரசியான மடவாள்போலும் முலையுண்ணும் பருவமான சிறுகுழந்தையைப் பெற்றதாய் போலவும்) எம்பெருமானை லாலனம் செய்பக்கடவனென்றும்.

"ஸ்வாமிவத் ஸுஹ்ருத்வத்"

(உடையவனாகவும் தோழனாகவும்) பாவிக்கப்படத்தக்கவன் என்றும் இப்புடைகளிலே எம்பெருமானை யுகப்பிக்கும் கிரமங்கள் பகவத் சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளில் ஸ்வாமித்வேந என்றது ஸ்வாபாவிகாகாரம். மற்றவை ஆரோபிதாகாரங்கள். ஸ்வாபாவிகா காரம்போலே ஆரோபிதாகாரங்களும் எம்பெருமானை யுகப்பிக்கும் என்று சாஸ்திரங்களின் திருவுள்ளம். ஸ்வாபாவிகாகாரத்தின் நிஷ்டை குலையுறும் போதாகவன்றோ ஆரோபிதாகாரத்தில் பிரவர்த்திக்க வேண்டும். அது குலையாதபோது ஆகாராந்தரத்தில் பிரவேசிக்கவேண்டாமன்றோ. கைக்குழந்தையைத் தாயார் போலவென்று சொல்லப்பட்ட ரீதியை பெரியாழ்வார் திருவுள்ளம்பற்றியருளினார். தாம் தாயாகவும் எம்பெருமான் குழந்தையாகவும் அவர் அநுபவம். அதைப்போலவும் பெருமாளைத் தாயாராகவும் தன்னைச் சிறுகுழந்தையாகவும் அநுபவிப்பதும் சாஸ்த்ராநுமதமே யென்று கொள்ளலாம்.



"அருஞ்சினத்தா லீன்றதாய் அகற்றிடினு மற்றவள்தன்
அருள்நினைந்தேயழுங்குழவி யதுவேபோன் றிருந்தேனே"

என்று குலசேகரப்பெருமாள் இவ்வர்த்தத்தைக் காட்டியருளி யிருக்கிறார். ஸ்ரீதேசிகனும் தெய்வநாயகன் விஷயத்தில்.

"ஜநநீ யதா ஸ்தநந்த்யம் விகம் உபாஸ்ரிதானா"

(சிறுகுழந்தையைப்பெற்ற தாய்போல அடியேனை யெடுத்து) என்று பகவத்சாஸ்திர வசனத்திலுள்ள ஜநநீஸ்தநந்தய பதங்களையே உபாதானம் பண்ணி, அந்த வசனத்தை ப்ரத்யபிஜ்ஞாபனம் பண்ணி, தம் திருவுள்ளம் இந்த பாவனையில் ஊன்றியிருப்பதைக் காட்டியருளி யிருக்கிறபடி திருவுள்ளம் பற்றத்தக்கது.

அதே ந்யாயமாக எம்பெருமான் நாயிகையாகவும் சேதநன் அநுபவிப்பவனாகவும் கொண்டு ரஸாநுபவம் செய்யும் முறையும் சாஸ்த்ர ஸம்மதமாகலாமே.

'ஸோऽச்நுதே ஸர்வாந் காமாந்
ஸஹ ப்ரஹ்மணா விபச்சிதேதி'

(ப்ருஹ்மஜ்ஞானமுடையவன் விபச்சித்தான ப்ரஹ்மத்தோடு எல்லா காமங்களையும் அநுபவிக்கிறான்.) என்கிற தைத்தரீய உபநிஷத்தின் வாக்கியத்திற்கு பரப்ரஹ்மத்தோடுகூட அதன் குணங்கள் எல்லாவற்றையும் அநுபவிக்கிறானென்று ஸ்ரீபாஷ்யத்தில் விவரணம் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. ஆக ப்ரஹ்மம் முக்தனுக்கு யோக்யம் என்னவே முமுக்ஷுவான பக்திமானுக்கு லீலாவிபூதியில் எம்பெருமான்கள் போக்யமாகத் தட்டில்லையே.

'ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்'

(ஜ்ஞானி எனக்கு ஆத்மாவென்பதாகவே என் அபிப்பிராயம்.) என்று எம்பெருமான் அருளிச்செய்கையாலே சேதநாசேதநங்களையெல்லாம் தனக்கு சரீரமாகக்கொண்ட அவன்தான் சரீரமாகயிருக்க நினைக்குமானால் 'செய்த தலையெழு நாற்றுப்போல் அவன்செய்வினைசெய்து கொள்ள' என்னும்படி அத்யந்த பாதந்த்ரனான இவன் அவன் திருவுள்ளமானபடி செய்தருளிக்கொள்ளட்டுமென்று இருக்கவன்றோ ப்ராப்தம்.

ஹம்ஸஸந்தேசத்தில் பேரருளாளனைப்பற்ற,

‘ஸந்தந்வாநா தாமபிரநிஶம் தாஜஸீதாமபி: ஸ்வாமிஸேவ்யாம்
க்ஷோண்யாம் வேதிப்யாமிஹ விதயதீ ஶீதலம் ஹவ்யவாஹம் ।
ஹேமாம்போஜஸ்ய ப்ரிய ஸஹசரீ காவ்ய லக்ஷ்மீ கடாக்ஷை:
ஸத்ய: ஶ்யாமா ஸகலஜநநீ தேவதா ஸந்நிதத்தே’

(இளந்திருத்துழாய் திருப்படித் தாமங்களால் தனது காந்தியை விருத்திசெய்துகொண்டும் ஐஹிகாமுஷ்மிகபலங்களுக்கு எப்போதும்கூடயிருப்பதாகிய பெரிய பிராட்டியாரின் திருக்கண் ணோக்குகளால் மேன்மேலே கறுத்தும் ஸர்வ லோகங்களுக்கும் மாதாவாயு மிருக்கிற ஒருதேவதை பிருஹ்மாவின் யாகவேதியாகிய ஹஸ்தகிரியில் குளிர்ந்த அக்நியிருப்பதுபோல் நித்திய ஸந்நிஹிதமாக இருக்கிறது) என்று ஸ்ரீதேசிகன் அநுஸந்தானம் இருக்கிறது,

இதே ச்லோகம் இரண்டாவது பாதம் மாத்திரம்.

“ஜாதம் ஹ்ருதி ஜாதகாந்திம் உபஷ்டே ஜாதவேதஸ:”

என்று பாடத்தோடு ‘ஸந்நிதத்தே’ என்பது ‘ஸந்நிதத்தாம்’ என்று ப்ரார்த்தனையாய் வரதராஜ பஞ்சாசத்தில் அநுஸந்திக்கப்பட்டிருக்கிறது. (ஹஸ்திகிரியில் மரகதமணியின் காந்தியைக்கொண்டதும் ஆகிய தேவதை அடியோங்கள் மனதில் ஸாந்நித்யம் செய்தருளட்டும்) என்று இந்தப்பாடத்தில் அர்த்தம்.

குவலயதளம்போன்ற காந்தியுடைத்தா யிருக்கையும் தேவப்ரக்ருதியா யிருக்கையும் நாயிகைக்கு விசேஷமென்று காமதந்த்ர நிஷ்கர்ஷமென்று காமதந்த்ர நிஷ்கர்ஷம். ஆகையால் இங்கு ஸ்ரீதேசிகன் பேரருளாளனப்பெருமான் திவ்யமங்கள விக்கிரஹத்தை தமக்கு நாயிகைபோல் போக்யமாகத் அநுபவித்தருளுகிறாரென்று ஒரு வித்வான் அருளிச்செய்கிறார்.

இந்தப் ப்ரக்கிரியை புதிதாக இருப்பதோடு சேதநனுக்கு உத்கர்ஷம் அபிஸம்ஹிதமாகிறதுபோல த்வனிப்பதாலும் புவனா ஜநநீ என்கிறபதம் அஸ்வரஸமாகுமாகையாலும் இந்த விவரணம் சிலருக்குத் திருவுள்ளவுகப்பா யில்லாமல் இருக்கக்கூடும். நம்முன்னோர்கள் யாரும் அப்படி அநுபவித்ததாகப் பாசுரமிடக் காணவுமில்லை. சைவஸமயாசாரியர்களில் ஒருவரான மாணிக்கவாசகன் என்பான் “சிற்றம்பலக்கோவை” என்று அகப்பொருள்கோவையொன்று இயற்றியிருப்பதுண்டு. அதுபோல் திருஅத்தியூர் கோவையொன்று ஸ்ரீதேசிகன் அருளிச்செய்துள்ளார் என்று வ்ருத்த வாக்யமிருக்கிறது.



‘அடங்காவசுரர் குலமறுத்தோ ரத்தியூரர்வென்றி
மடங்காதநேமி வரதர்நன் ஞட்டிற்றன் மைந்தனுடன்
முடங்காமலந்த மனேவியும்போய் முயன்றாருடன்
தடங்காவும்யாறும் குளறுஞ்சென்றுடவுந் தக்கதுவே’

எனவொரு செய்யுள் தமிழ் இலக்கணநூலொன்றில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. அது அத்திருக்கோவையிலுள்ளதோ வேறோ அறியமாட்டிலோம். அத்திருக்கோவையும் கிடைக்கவில்லை. அத்தகைய நூல் ஸேவிக்கப்பெற்றால் எத்தனையோ விஷயங்கள் வெளிவரக்கூடும்.

‘தண்டிருவயிந்திரபுரத்துமேவு சோதியை’ என்று கலியன் தெய்வநாயகனைச் சோதியாக அநுஸந்திக்கிறார். அவ்வார்த்தை ஸ்ரீதேசிகன் அச்சுத சதகத்தில்,

‘ஸ்திரஜ்யோதி:’ (நிலைநின்ற சோதியாய்) என்று விவரித்தருளுகிறார்.

வரதராஜ பஞ்சாசத்தில்,

‘ஹஸ்தீஶ தேஜஸி த்வத்ஸௌம்யதேஜஸி விசிந்த்யமாநே
ஶ்லாக்யேத ஸம்ஜ்ஞபதவீம் ஸஹஸ்ரபாநு:’

(வேழமலை நாதனே! தேவரீருடைய தேஜஸ்ஸை ஆலோசிக்குமிடத்து ஆயிரம் கிரணங்களையுடைய ஸூர்யன் பேரிருள் என்னும் வகுப்பிலிருப்பது கொண்டாடத்தகுந்ததாகும்.) என்று பேரருளாளனது தேஜஸ்ஸை மேலாக வர்ணித்தருளிச் செய்திருக்கிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாக,

‘அடியவர்க்கு மெய்யனே அயிந்தைவாழும்
அஞ்சலென அருள்மொழியும் வள்ளலே நின்
வடிவழகு மறவாதார் பிறவாதரே.’

என்று ஸ்ரீதேசிகன் நவரத்தினமாலையிலே தெய்வநாயகன் திறத்திலே அருளிச்செய்த திருவுள்ளக்கருத்தை நிரூபிக்குமிடத்திலே,

‘த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோऽர்ஜுந’

(இந்த தேஹம் விட்டபின்பு மறுதேஹத்தை அடையமாட்டான், என்னை அடைவான்) என்று ஸ்ரீகீதாசார்யன் அவதார ரஹஸ்யசிந்தனம் பண்ணுமவனைப்பற்ற அருளிச்செய்தபடி இங்கே அநுஸந்தித்தபடி விசதமாகுமாகையாலே இவ்வேற்றமொன்றே பேரருளாளனைவிட அடியவர்க்கு மெய்யனிடத்தில் ஸ்ரீதேசிகனுடைய பக்தியதிசயத்தைக் காட்டுமாயிருந்ததென்று சிலர் சொல்லலாம்.

இங்கு தேசவிசேஷ ப்ராப்தி முன்னாக பகவதநுபவம் பலமென்று ஏற்படுகிறது. இங்குற்றை அநுபவந்தன்னி தாமானலன்றோ தேசாந்தர ரூபாந்தராதிகளைத் தேடவேண்டும். இதுகொண்டே திருவயிந்திர புரத்தில் அநுபவம் திருவுள்ளத்திற்குப் பாங்காயில்லையென்றும் அது கொண்டே தேச விசேஷ ப்ராப்தி பூர்வகமான ரூபாந்தராநுபவத்தை ஸ்ரீதேசிகன் ஆசைப்பட்டு இப்படி அநுஸந்தித்தருளினரென்றும் கொள்ளவேண்டுகையாலே பரமபதமும் வேண்டேனென்று ஈடுபட்ட பேரருளாளனைவிட தெய்வநாயன் விஷயத்தில் ஸ்ரீதேசிகன் ஆழ்ந்தநுபவித்தமை இல்லையென்று சொல்லலாயிருக்கிறது. ஆழ்வான்,

'நேத்ரஸ்யாஸ்ய கரீஶ ஸதா பவ'

என்று ஸதத தர்சனத்தை வேண்டினர். அதை அடியொத்தி,

'அநுதிநமநிமேஷலோசநைஸ் த்வாம் நிஷேவ்யே'

(இமையாத கண்களால் ப்ரதிதினமும் ஸேவிக்கப்பெறவேண்டும்) என்று ஸ்ரீதேசிகன் பேரருளாளனை ப்ரார்த்திருக்கிறார். இதையும் திருவுள்ளம் பற்ற வேண்டும். "காலனூர்தம் மெனக்கவராது" என்றும் 'வெஞ்சொலாளர் காலதூதர் வீசுபாசம் வந்தென்மேல் விழுந்தழுந்தியானயூர்ந்து வீழ்வதற்கு முன்ன நீ' என்றும் யமதூதர்கள் வரும்போதாக தெய்வநாயகனது அருளை வேண்டியிருந்ததையும்.

"[illegible]
[illegible]"

பெருங்கோவ முடையவரும் புருவநெறிப்பால் பெரும் பாபத்தைக் கொடுக்கும் கடோர முகமுடையவனுமாகிய யமன் பார்ப்பதற்கு முன்னமே) அருள்செய்ய மேண்டுமென்று பேரருளாளப்பிரார்த்தனையும் ஆராயும்போது அடியார்மெய்யன்முற்காப்பில் அருளாளரவ்வளவுசெய்யரென்று தோன்றும்.

இப்படி மேல்மேலும் வளர்த்தெழுதி தீபிகையையின்னும் ஆக்கிரமிப்பது உசிதமன்றென்றும் நினைக்கிறோம். கடைசிப் பெரியாழ்வார் பிரரூபத்தை இங்கேதானே பயசங்கையாலே கலங்கி பல்லாண்டுபாடியருள இருள்தருமாஞாலத்துக்கென்றே ஏற்பட்ட அர்ச்சாவதாரத்தில் அஸ்தானே பயசங்கையாலே கலங்கி "வாழியருளாளர்" என்று ஸ்ரீதேசிகன் பேரருளாளனை மங்களாசாஸநம் செய்தருளினப்போலே அச்சுதனையோ அனந்தனையோ மங்களாசாஸம் செய்ததுண்டோ என்கிற கேள்வியோடு இந்த வியாஸத்தை முடித்து ஸ்ரீதேசிக பக்தர்கள் திருமுன்பே ஸமர்ப்பிக்கிறோம்.

ஸ்ரீசைல தாதாசாரியர்.



ப்ரஹ்மைவ ஸுரநரதிர்யக்ஸ்தாவரநாரகிஸ்வர்க்யபவர்கி சேதநேஷு ஸ்வபாவம் ஸ்வபாவதோ விலக்ஷணாவிலக்ஷணம் ச வியதாதி நாநாவிதமலரூபபரிணாமாஸ்பதம் சேதி ப்ரத்யவதிஷ்டந்தே |

[ஶாங்கரபக்ஷ ப்ரதிக்ஷேப:]

தத்ர ப்ரதமபக்ஷஸ்ய ஶ்ருத்யர்த்தபர்யாலோசநபரா அபரிஹார்யான் தோஷான் உதாஹரந்தி | ததா ஹி — ப்ரக்ருதபராமர்சி தச்சப்தாவகதஸ்ய ப்ரஹ்மண: ஸ்வஸங்கல்பக்ருத ஜகஜ்ஜந்ம[illegible] | 'ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேய' இத்யாரப்ய 'ஸந்மூலா: ஸோம்யேமா: ஸர்வா: ப்ரஜா: ஸதாயதநா: ஸத்ப்ரதிஷ்டா:' இத்யாதிபி:

தேவன் மனுஷ்யன் பசு ஸ்தாவரம் நரகத்தில் இருக்கும் ஆத்மாக்கள் ஸ்வர்க்கத்தில் இருக்கும் ஆத்மாக்கள் மோக்ஷத்தில் இருக்கும் ஆத்மாக்கள் இவைகளாய் இருப்பதையும் ஸ்வபாவமாக உடையது, ஸ்வபாவத்தில் இவைகளை விட வேறுபட்டதாகவும், வேறுபடாததாகவும் இருந்துகொண்டு ஆகாசம் முதலிய அனேகம் விதங்களான தோஷங்களாகிய விகாரங்களுக்கு ஆஸ்பதமாகிறது என்று வாதம் செய்கிறார்கள்.

[ஶாங்கரபக்ஷ நிராஸம்]

அவைகளுக்குள் முதலாவது பக்ஷத்திற்கு வேதங்களின் அர்த்தங்களை விசாரிப்பவர்கள் பரிஹரிக்க முடியாத தோஷங்களைச் சொல்லுகிறார்கள். எப்படி எனில்:—இங்கு ப்ரஸ்தாவிக்கப்பட்டதையே சொல்லுகிற தத் (அந்த) என்னும் பதத்தினால் அறியப்படுகிற ப்ரும்மத்திற்கு 'அந்த ஸத் நான் பஹுவாகக் கடவேன், அதற்காக பிறக்கக் கடவேன் என்று ஸங்கல்பித்தது' என்றாரம்பித்து 'இந்த எல்லா ப்ரஜைகளும் ஸத்தையே காரணமாக உடையது, ஸோம பானம் செய்யத் தகுந்தவனே! ஸத்தையே ஆதாரமாக உடையவைகள், ஸத்திலேயே லயிக்கக்கூடியவைகள்' என்றிவை முதலிய வாக்யங்களினால் சொல்லப்படுகிற தன்னுடைய ஸங்கல்பம் மாத்திரத்தினாலே செய்யப்பட்ட லோகங்

வ்யத்யாஸம். இதில் ஐக்யோப தேசத்தை நிரூபிப்பதாக ஆரம்பித்து பேதமும் ஸ்வபாவத்தில் ஏற்பட்டது தான் என்று சொல்லப்படுகிறது என்பதைக் கருத்தில் வைத்துக்கொண்டு 'ஒன்றென்று சொல்லியிருப்பதின் உண்மையை நிரூபிக்கிற இன்னும் சிலர்' என்று பரிஹாஸமாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்றறியத் தக்கது.

1. சாந்தோக்யம்-6-2-3

பக்ஷே ச்ருதிவாதின: ததாவஸ்திதயா ச்ருத்யா காரணாம்சநிஷ்க்ருஷ்ட: ஸர்வஜ்ஞதா ஸர்வசக்தித்வ ஸர்வேச்வரத்வ ஸர்வப்ரகாரத்வ ஸமாப்யதிகநிவ்ருத்தி ஸத்யகாமத்வ ஸத்யஸங்கல்பத்வ ஸர்வாவபாஸகத்வாத்யநவதிகாதிசய அஸங்க்யேய கல்யாணகுணகணா: அபஹதபாப்மத்வாதய இத்யாத்யநேகவாக்யாவகத நிரஸ்தநிகிலதோஷதா ச ஸர்வே தஸ்மிந் பக்ஷே விஹந்யந்தே ||

[சாங்கரமதரீத்யா பூர்வபக்ஷ:]

அத ஸ்யாத்—உபக்ரமே ஏகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாநம் நைவேந காரணஸ்யைவ ஸத்யதாம் ப்ரதிஜ்ஞாய தஸ்ய காரணபூதஸ்யைவ ஸத்யதாம் விகாரஜாதஸ்ய அஸத்யதாம் ம்ருத்த்ருஷ்டாந்தேந உபபாத்ய ஸத்யபூதஸ்யைவ ப்ரஹ்மண: 1 'ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்'

களினுடைய உத்பத்தி ஸ்திதி நாசம் முதலிய வ்யாபாரங்களும் அப்படிப் பட்ட காரண வஸ்துவின் இடத்தில் இருப்பவைகளாக வேறு ஸந்தர்ப்பங்களில் சொல்லப்படுகிற எல்லாவற்றையும் அறியும் தன்மை, எல்லா சக்திகளையும் உடையவனுயிருக்கை, எல்லாவற்றிற்கும் ஈச்வரனுயிருக்கும் தன்மை, எல்லா வஸ்துக்களையும் தனக்கு விசேஷணங்களாக உடையவனுயிருக்கை, தனக்கு ஸமமான வஸ்துவும் மேல்பட்ட வஸ்துவும் இல்லாமை, உண்மையான கல்யாண குணங்களை உடையவனுயிருக்கை, உண்மையான ஸங்கல்பத்தை உடையவனுயிருக்கை, எல்லாவற்றையும் ப்ரகாசம் செய்யும் தன்மை முதலிய எல்லையில்லாத மேன்மையை உடைய கணக்கில்லாத கல்யாண குணங்களையுடையவன் கர்ம ஸம்பந்தம் இல்லாதவன் என்றிவை முதலிய அநேக வாக்கியங்களினுல் அறியப்பட்ட ஒரு தோஷமும் இல்லாமல் இருக்கும் தன்மையும் எல்லாம் அந்தப் பக்ஷத்தில் மறுக்கப்படுகின்றன.

[சங்கரமதப்படி பூர்வபக்ஷம்]

ஆரம்பத்தில் ஒன்றை அறிவதினுலேயே எல்லாம் அறிந்ததாய்விடும் என்று நிரூபிப்பதினுல் காரணமாகிய வஸ்துவே உண்மையானது என்று ப்ரதிஜ்ஞைசெய்து அந்தக் காரணமாகிய வஸ்துதான் ஸத்யம் என்பதையும் விகாரங்கள் ஸத்யமல்ல என்பதையும் மண் உருண்டையாகிற உதாஹரணத்தினுல் நிரூபித்து அப்படி ஸத்யமாகிய ப்ரும்மம் தன்னுடைய ஜாதியைச் சேர்ந்த வஸ்துக்கள் வேறு ஜாதியைச் சேர்ந்த வஸ்துக்கள் இவைகளைவிட பேதம் இல்லாதது என்று பேதத்தை நிராகரிப்பதினுல் ஒரு விசேஷமும்

1. சாந்தோக்யம். 6-2-1.



இதி ஸஜாதீய விஜாதீய நிகிலபேதநிரஸநேந நிர்விசேஷதைவ ச்ருதிவாதிதா | அதஸ்ஸாயகாநி ச்ருதிவாக்யாநி 1 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம', 2 'நிஷ்கலம் நிஷ்க்ரியம், நிர்குணம், நிரஞ்ஜநம்', 3 'விஜ்ஞாநமாநந்தம்' இத்யாதீநி ஸர்வவிசேஷப்ரத்யநீககாரதாம் போதயந்தி | ந சைகாகாரதாவபோதே பதாநாம் பர்யாயதா—ஏகஸ்யைவ வஸ்துந: ஸர்வவிசேஷப்ரத்யநீககாரபோதவஸ்த்வேந ஸர்வபதாநாமர்த்தவத்த்வாத்—இதி ||

[விசிஷ்டாத்வைத ஸித்தாந்தரீத்யா ஸமாதாநம்]

நைததேவம்—ஏகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாநம் ஸர்வஸ்ய மித்யாத்வே ஸர்வஸ்ய ஜ்ஞாதவ்யஸ்யா

இல்லாதது என்பதே 'ஓ! ஸௌம்ய! இந்த ப்ரபஞ்சம் முதலில் இரண்டாவது வஸ்து ஒன்றுமில்லாததாயும் ஒன்றாயும் இருக்கிற ஸத்தாகவே இருந்தது' என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட வஸ்துவை சோதிக்கிற (அதாவது தோஷங்கள் ஒன்றும் இல்லாதது என்று நிரூபிக்கிற) வேறு ஸந்தர்ப்பங்களில் சொல்லப்படுகிற 'ப்ரும்மம் ஸத்யமாயும் ஜ்ஞானமாயும் அளவில்லாததாயும் இருக்கிறது', 'அவயவம் இல்லாதது, வ்யாபாரங்கள் இல்லாதது, குணங்கள் இல்லாதது, ப்ரக்ருதி ஸம்பந்தம் இல்லாதது,' 'ஜ்ஞானமாயும், ஆநந்தமாயும் இருக்கிறது' என்றிவை முதலிய வாக்கியங்கள் எல்லா விசேஷங்களுக்கும் விரோதமான ஸ்வபாவத்தை உடையது (அந்த ப்ரும்மம்) என்பதையே தெரிவிக்கின்றன. அப்படி ஒரே விதமான ஆகாரத்தை உடையது என்று தெரிவித்தால் பதங்கள் எல்லாம் ஒரே அர்த்தத்தைச் சொல்லுகிறதாக இருக்க வேண்டுமே என்பதும் இல்லை—வஸ்து ஒன்றாய் இருந்தபோதிலும் எல்லா விசேஷங்களுக்கும் விரோதமான ஆகாரத்தை உடையது என்பதைத் தெரிவிப்பதினுல் * எல்லாப் பதங்களும் ப்ரயோஜனத்தை உடையதாகையினுல் — என்று இருக்கலாமே (என்னில்)

[விசிஷ்டாத்வைத ஸித்தாந்தப்படி ஸமாதானம்]

அது இப்படி யாகாது—ஒன்றை அறிந்ததினுல் எல்லாம் அறியப்பட்டதாகும் என்பது எல்லாம் பொய்யானுல் அறியவேண்டியதான வஸ்து இல்லாமை

* ஸத்யம் என்றுல் அஸத்யமான வஸ்துவைக்காட்டிலும் வேறுபட்டது. இப்படியே அந்தந்தப் பதங்கள் அதற்கு விரோதமான ஸ்வபாவமுடைய

1. தைத்திரீயம்-ஆநந்த-1-1. 2. ச்வேதா-6-19, ஆத்மோப நிஷத்.

3. ப்ருஹதாரண்யகம்-5-9-28.

ஸாதனம் ந ஸெத்ஸ்யதி | ஸத்யமித்யாவஸ்துனோரைக்யாஸம்ப வாத் | அபி சைகவிஜ்ஞானேன ஸர்வ விஜ்ஞானப்ரதிஜ்ஞா ஸர்வஸ்ய ததாத்மகத்வேனைவ ஸத்யத்வே ஸித்த்யதி | அய மர்த்த: — ச்வேதகேதும் ப்ரத்யாஹ — 1 'ஸ்தப்தோ(அ)ஸி உத தமாதேசமப்ராக்ஷ்ய:' இதி | பரிபூர்ண இவ லக்ஷ்யஸே, தானாசார்யான் ப்ரதி ததாதேசம் ப்ருஷ்டவானஸி இதி | ஆதிச்யதே அனேன இதி ஆதேச: | ஆதேச: — ப்ரசா ஸனம் | 2 'ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரசாஸனே கார்கி ஸூர்யாசந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத:' இத்யாதிபிரைகா ர்த்த்யாத் | ததா ச மானவம் வச: — 3 'ப்ரசாஸிதாரம் ஸ

---

யிஞல்ஸித்திக்காது. ஸத்யமாயிருக்கைபொய்யாயிருக்கை இவையிரண்டும் †ஒன்ருக வேண்டி வரும். பின்னை எப்படி என்னில்:—ஒன்றை அறிந்ததிஞல் எல்லாம் அறியப்பட்டதாகும் என்கிற ப்ரதிஜ்ஞை எல்லா வஸ்துக்களும் அந்த ப்ரும்ம ஸ்வரூபமாகவே ஸத்யமாக இருக்கும்பக்ஷத்தில் ஸித்திக்கும். இதன் கருத்து:—ஶ்வேதகேதுவைக் குறித்துச் சொல்லுகிருர் 'ஸ்தப்தஞய் இருக்கிருயே, அப்படிப்பட்ட ஆதேஶத்தைப்பற்றி உன் ஆசார்யனைக் கேட்டாயா' என்று. அதாவது எல்லா ஜ்ஞானமும் நிறைந்தவனைப்போலக் காணப்படுகிருயே, அந்த ஆசார்யர்களிடத்தில் அந்த ஆதேஶத்தைக் கேட்டாயோ, என்றபடி. எவஞல் இந்த ப்ரபஞ்சம் நியமிக்கப்படுகிறதோ அவன் ஆதேஶம். ஆதேஶமாவது நியமனம் (அதாவது எல்லா லோகத்தையும் நியமிக்கிற பரப்ரும்மம் என்றபடி). 'ஓ! கார்கியே! இந்த ப்ரும்மத்தின் நியமனத்தில் ஸூர்யன் சந்திரன் இவர்கள் தரிக்கப்பட்டவர்களாய் நிற்கிருர்கள் (அதாவது பரமாத்மாவிஞல் தரிக்கப்பட்டவர்களாய் அவனுடைய நியமனத்திற்கு அடங்கி இருக்கிருர்கள்)' என்றிவை முதலிய ஶ்ருதி வாக்யத்துடன் துல்யமான அர்த்தத்தைச் சொல்லுகிறபடியிஞல். அப்படியே மனுவினுடைய

---

வஸ்துக்களைக் காட்டிலும் வேறுபட்டது ப்ரும்மம் என்று தெரிவிப்பதிஞல் பதங்களுக்கு ப்ரயோஜனம் ஏற்படுகிறது என்றபடி.

† அதாவது ஒன்றை அறிந்ததிஞல் மற்ருென்றும் அறியப்பட்டது என்னில் இரண்டு வஸ்துக்களும் ஒரே ஸ்வபாவத்தை உடையவைகளாக இருக்க வேண்டியதாகையிஞல் ப்ரபஞ்சத்திற்கு ஸத்யமாயிருக்கும் தன்மையாவது ப்ரும்மத்திற்குப் பொய்யாயிருக்கும் தன்மையாவது ஒப்புக்கொள்ள வேண்டி வரும் என்றபடி.

1. சாந்தோக்யம் 6-1-3. 2. ப்ருஹதாரண்யகம்-5-8-8. 3. மனுஸ்ம்ருதி-12-122.



ர்வேஷாம்' இத்யாதி | அத்ராப்யேகமேவ இதி ஜகது பாதானதாம் ப்ரதிபாத்ய அத்விதீயபதேனாதிஷ்டாத்ரந்தரநிவா ரணாத் அஸ்யைவாதிஷ்டாத்ருத்வமபி ப்ரதிபாத்யதே | அத ஸ்தம் ப்ரசாஸிதாரம் ஜகதுபாதானபூதமபி ப்ருஷ்டவானஸி | யேன ச்ருதேன மதேன விஜ்ஞாதேன அச்ருதமமதமவிஜ்ஞாதம் ச்ருதம் மதம் விஜ்ஞாதம் பவதி இத்யுக்தம் ஸ்யாத் | நிகில ஜகதுதயவிபவவிலயாதிகாரணபூதம் ஸர்வஜ்ஞத்வஸத்யகா மத்வஸத்யஸங்கல்பத்வாத்யபரிமிதோதாரகுணஸாகரம் கிம் ப்ரஹ்ம த்வயா ச்ருதமிதி ஸாதேசஸ்ய பாவ: | தஸ்ய நிகிலகாரணதயா காரணமேவ நாநாஸம்ஸ்தானவிசேஷ

---

வார்த்தையும் 'எல்லா வஸ்துக்களையும் நியமனம் செய்கிற' என்றிவை முதலியது காணப்படுகிறது. இந்தப் பக்ஷத்திலும் ஒன்ருகவே என்பதிஞலே ப்ரபஞ்சத்திற்கு உபாதான காரணம் என்று நிரூபித்து, அத்விதீயம் என்கிற பதத்திஞல் இதை அதிஷ்டானம் * செய்பவர் வேறு ஒருவரும் இல்லை என்று மறுப்பதிஞல் இந்த உபாதான காரணமாகிய ப்ரும்மத்திற்கே அதிஷ்டானம் செய்யும் தன்மையும் உண்டு என்று நிரூபிக்கப்படுகிறது. ஆகையிஞல் அப்படிப்பட்டவஞய் ப்ரபஞ்சத்தை நியமிக்கிறவஞயும் ப்ரபஞ்சத்திற்கு உபாதான காரணமாயும் இருக்கிற பரமாத்மாவைப்பற்றிக் கேட்டாயோ. எவனைப்பற்றிக் கேட்பதிஞலும் மனனம் செய்வதிஞலும் த்யானம் செய்வதிஞலும் இதற்கு முன் கேட்கப்படாததும் மனனம் செய்யப்படாததும், த்யானம் செய்யப்படாததுமான எல்லா வஸ்துவும் கேட்கப்பட்டதாயும் மனனம் செய்யப்பட்டதாயும் த்யானம் செய்யப்பட்டதாயும் ஆகிறதோ என்று சொல்லப்பட்டதாகிறது. எல்லா ப்ரபஞ்சங்களினுடைய உத்பத்தி ஸ்திதி லயம் முதலிவைகளுக்குக் காரணமாயும், எல்லாவற்றையும் அறிந்தவஞயிருக்கை, ஸத்யகாமஞயிருக்கை, ஸத்யஸங்கல்பஞயிருக்கை முதலிய கணக்கில்லாத கம்பீரமான குணங்களுக்கு ஸமுத்திரம்போன்றவஞய் இருக்கிற ப்ரும்மம் உன்ஞல் கேட்கப்பட்டதா என்று மனதில் கருத்து. அந்தப் பரமாத்மா எல்லா ப்ரபஞ்சத்திற்கும் காரணமாகையிஞலே காரணமாகிய வஸ்துவே அனேகவிதங்களான அமைப்புகளை அடைந்

---

* அதிஷ்டானம் செய்வதாவது குடம் முதலிய வஸ்துக்களுக்கு உபாதான காரணமாகிய மண் உருண்டையைத் தன்னுடைய வ்யாபாரத்திஞல் குடமாக மாறும்படி செய்வது, அப்படிச் செய்யும் குயவன் அதிஷ்டாதா என்னப்படுகின்ருன்.

ஸம்ஸ்திதம் கார்யமித்யுச்யத இதி காரணபூத ஸூக்ஷ்ம சிதசித்வஸ்து ஶரீரக ப்ரஹ்மவிஜ்ஞாநேந கார்யபூதமகிலம் ஜகத்விஜ்ஞாதம் பவதீதி ஹ்ருதி நிதாய [1]'யேநாஶ்ருதம் ஶ்ருதம் பவதி அமதம் மதம் அவிஜ்ஞாதம் விஜ்ஞாதம் ஸ்யாத்' இதி புத்ரம் ப்ரதி ப்ருஷ்டவாந் பிதா । ததேதத் ஸகலஸ்ய வஸ்துஜாதஸ்யைககாரணகத்வம் பித்ரா ஹ்ருதி நிஹிதம் அஜாநந் புத்ர: பரஸ்பரவிலக்ஷணேஷு வஸ்துஷு அந்யஸ்ய விஜ்ஞாநேந ததந்யவிஜ்ஞாநஸ்யாகடமாநதாம் புத்த்யா பரிசோதயதி — 'கதம் நு பகவ: ஸ ஆதேஶ:' இதி । பரிசோதித: பிதா ஸ்வஸ்யைவ ஹ்ருதி நிஹிதம் ஜ்ஞாநாநந்தாமலைகஸ்வரூபமபரிச்சேத்யமாஹாத்ம்யம் ஸத்யஸங்கல்பத்வாத்யநவதிகாதிஶயாஸங்க்யேய கல்யாணகுணகணை: ஜுஷ்டமவிகாரஸ்வரூபம் பரம் ப்ரஹ்மைவ நாம

---

ததாய் கார்யம் என்று சொல்லப்படுகிறபடியினால் காரணமாகிய ஸூக்ஷ்மமான சேதனு சேதன வஸ்துக்களை ஶரீரமாக உடைய ப்ரும்மத்தை அறிந்ததினால் கார்யமாகிய எல்லா ப்ரபஞ்சமும் அறியப்பட்டதாகிறது என்று மனதில் நினைத்துக்கொண்டு 'எவனைப்பற்றிக் கேட்பதினால் கேட்கப்படாத ப்ரபஞ்சம் கேட்கப்பட்டதாகிறதோ, மனனம் செய்யப்படாததும் மனனம் செய்யப்பட்டதாகிறதோ, த்யானம் செய்யப்படாததும் த்யானம் செய்யப்பட்டதாகிறதோ' என்று பிள்ளையைக் குறித்துத் தகப்பனுர் கேட்டார். அப்படிப்பட்ட இந்த தகப்பனுருடைய மனதில கருதப்பட்ட எல்லா வஸ்துக்களும் ஒரே வஸ்துவைக் காரணமாக உடையது என்பதை அறியாதவனுகிய பிள்ளை ஒன்றுக்கொன்று வெவ்வேறு விதங்களான வஸ்துக்களில் ஒன்றை அறிந்ததினுல் மற்றொன்று அறியப்பட்டதாகிறது என்பது பொருந்ாது என்று நினைத்துக் கேட்கிறுன்—'ஓ! பகவானுகிய பிதாவே! அந்த ஆதேஶம் எப்படிப்பட்டது' என்று. (இப்படி) கேட்கப்பட்ட பிதா மறுபடியும் முன்பு தன் மனதில் எண்ணப்பட்டதாய் ஜ்ஞானம், ஆனந்தம், தோஷங்கள் ஒன்றுமில்லாமலிருக்கை, இவைகளையே ஸ்வரூபமாக உடையதாயும் அளவிட முடியாத மஹிமையை உடையதாயும் ஸத்ய ஸங்கல்பனுயிருக்கையுடன் சேர்ந்த இல்லையில்லாத மேன்மையையுடைய கணக்கில்லாத கல்யாண குணங்களையுடையதாயும் ஒரு விகாரமும் இல்லாத ஸ்வரூபத்தை யுடையதாயும்

1, சாந்தோக்யம்6-1-3.



நாமரூபவிபாகாநர்ஹஸூக்ஷ்மசிதசித்வஸ்துஶரீரம் ஸ்வலீலயைவ ஸ்வஸங்கல்பேந அநந்தவிசித்ரஸ்திரத்ரஸஸ்வரூபஜகத்ஸம்ஸ்தாநம் ஸ்வாம்ஶேநாவஸ்திதமிதி தஜ்ஜ்ஞாநேநாஸ்ய நிகிலஸ்ய ஜ்ஞாததாம் ப்ருவந் லோகத்ருஷ்டம் கார்யகாரணயோரநந்யத்வம் தர்ஶயிதும் த்ருஷ்டாந்தமாஹ—[1]'யதா ஸோம்யைகேந ம்ருத்பிண்டேந ஸர்வம் ம்ருந்மயம் விஜ்ஞாதம் ஸ்யாத் வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம்' இதி । ஏகமேவ ம்ருத்த்ரவ்யம் ஸ்வைகதேஶேந நாநாவ்யவஹாராஸ்பதத்வாய கடஶராவாதி நாநாஸம்ஸ்தாநாவஸ்தாரூபவிகாராபந்நம் நாநாநாமதேயமபி ம்ருத்திகாஸம்ஸ்தாநவிஶேஷத்வாத் ம்ருத்த்ரவ்யமேவேதி வ்யவஸ்திதம் ந வஸ்த்வந்தரமிதி,

---

நாமம் ரூபம் இவைகளினுல் பிரிக்கத்தகாத ஸூக்ஷ்மமான சேதனு சேதன வஸ்துக்களை ஶரீரமாக உடையதாயும் இருக்கிற அந்த பரப்ரும்மம் தானே தன்னுடைய விளையாட்டினுலேயே (அதாவது விளையாட்டிற்காக) தன்னுடைய ஸங்கல்பத்தினுல் தனக்கு விஶேஷமான பாகத்தினுல் விசித்ரங்களான ஸ்தாவரஜங்கம ரூபங்களான ப்ரபஞ்சம் என்கிற அமைப்பை உடையதாக இருக்கிறதாகையினுல் அந்தக் காரணமாகிய வஸ்துவை அறிந்ததினுல் எல்லா ப்ரபஞ்சமும் அறியப்பட்டதாகிறது என்பதை நிரூபிப்பதற்காக லோகத்தில் கண்டறியப்பட்ட கார்ய காரணங்கள் ஒரே வஸ்து என்பதைக் காட்டுவதற்காக உதாஹரணங்களைச் சொல்லுகிறுர்—'ஓ! ஸௌம்ய! எப்படி ஒரு மண் உருண்டையை அறிந்ததினுல் அந்த மண்ணின் கார்யங்களான எல்லா வஸ்துக்களும் அறியப்பட்டதாகுமோ (ஏனெனில்) அந்த கார்ய தசையில் உண்டான விகாரமும் குடம் முதலிய பெயரும் அந்த மண் உருண்டை என்கிற வஸ்துவினுலேயே வாயால் சொல்லுவது ஜலம் கொண்டு வருகை முதலிய கார்யம் என்கிற ப்ரயோஜனத்திற்காக அடையப்படுகிறதோ, மண் என்பதே இரண்டு அவஸ்தைகளிலும் தொடர்ந்து இருக்கிறதோ'—என்று. (அதாவது) மண் என்கிற வஸ்து தன்னுடைய சில பாகத்தினுல் அனேக விதங்களான வ்யவஹாரங்களுக்கு ஆதாரமாக இருப்பதற்காக குடம் மடக்கு முதலிய அனேகம் விதங்களான அமைப்புகளை உடைய அவஸ்தைகளாகிற விகாரங்களை அடைந்து அனேகம் பெயர்களை உடையதாயிருந்த போதிலும் எப்படி அனேக விதங்களான மண் என்கிற வஸ்துவினுடைய அமைப்புகளா

1. சாந்தோக்யம்-6-1-4.

𑌯𑌥𑌾 𑌮𑍃𑌤𑍍𑌪𑌿𑌣𑍍𑌡𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌤𑌤𑍍𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌘𑌟𑌶𑌰𑌾𑌵𑌾𑌦𑌿 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑌮𑍇𑌵 𑌭𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃। 𑌤𑌤𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌕𑌕𑌾𑌰𑌣𑌤𑌾𑌮𑌜𑌾𑌨𑌨𑍍 𑌪𑍃𑌚𑍍𑌛𑌤𑌿— 1'𑌭𑌗𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑍇𑌵 𑌮𑍇 𑌤𑌦𑍍 𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍁'—𑌇𑌤𑌿। 𑌤𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌂 𑌸𑌰𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌰𑌣𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌪𑌦𑌿𑌶𑌨𑍍 𑌸 𑌹𑍋𑌵𑌾𑌚—2'𑌸𑌦𑍇𑌵 𑌸𑍋𑌮𑍍𑌯𑍇𑌦𑌮𑌗𑍍𑌰 𑌆𑌸𑍀𑌤𑍍 𑌏𑌕𑌮𑍇𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂' 𑌇𑌤𑌿। 𑌅𑌤𑍍𑌰 𑌇𑌦𑌂 𑌇𑌤𑌿 𑌜𑌗𑌨𑍍𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑌂। 𑌅𑌗𑍍𑌰 𑌇𑌤𑌿 𑌚 𑌸𑍃𑌷𑍍𑌟𑍇𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌾𑌲𑌃। 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌕𑌾𑌲𑍇 𑌜𑌗𑌤𑌃 𑌸𑌦𑌾𑌤𑍍𑌮𑌕𑌤𑌾𑌂 𑌸𑌦𑍇𑌵 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑍍𑌯 𑌤𑌤𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌕𑌾𑌲𑍇𑌽𑌪𑍍𑌯𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌮𑌿𑌤𑌿 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌏𑌕𑌮𑍇𑌵 𑌇𑌤𑌿 𑌸𑌦𑌾𑌪𑌨𑍍𑌨𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑌸𑍍𑌤𑌦𑌾𑌨𑍀𑌂

---

யிருக்கிறபடியினால் மண் என்கிற வஸ்துவே எப்பொழுதும் இருக்கிறதோ, வேறு வஸ்துவாகவில்லையோ, எப்படி அந்த மண் உருண்டையை அறிந்ததினாலேயே அதின் ஒருவித அமைப்பாகிய குடம் மடக்கு முதலிய எல்லாம் அறியப்பட்டனவாகவே ஆகிறதோ என்று தாத்பர்யம். பிறகு எல்லா ப்ரபஞ்சமும் ப்ரும்மம் ஒன்றையே காரணமாக உடையது என்பதை அறியாத பிள்ளை 'பகவானாகிய தாங்களே எனக்கு அதைச் சொல்லவேண்டும்' என்று கேட்கிறான். பிறகு எல்லாவற்றையும் அறிந்ததாயும் எல்லாவித சக்தியை உடையதாயும் இருக்கிற ப்ரும்மம் தானே எல்லாவற்றிற்கும் காரணம் என்று உபதேசிப்பதற்காக "ஓ! ஸௌம்ய! இது இதற்குமுன் இரண்டாவது வஸ்து இல்லாததாயும் ஒன்றாயும் ஸத்தாகவுமே இருந்தது" என்று சொல்லுகிறார். இந்த வாக்யத்தில் 'இது' என்று இந்த ப்ரபஞ்சம் குறிக்கப்பட்டது. 'இதற்கு முன்' என்பதினால் ஸ்ருஷ்டிக்கு பூர்விய காலம் குறிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் இந்த ப்ரபஞ்சம் ஸத்தின் ரூபமாகவே இருந்தது என்பதை 'ஸத்தாகவே' என்பதினால் நிரூபித்து ஸ்ருஷ்டி தசையிலும் அந்த ஸத்தாயிருக்கும் தன்மை துல்யமானது * என்று எண்ணி ஒன்றாகவும் என்பதினால் ஸத்தாயிருக்கிற தசையை அடைந்திருக்கிற ப்ரபஞ்சம் அந்த ப்ரளய தசையில் பிரிக்கப்படாத நாமரூபங்களையுடையது என்பதை நிரூபித்து,

---

* ஸ்ருஷ்டி தசையிலும் ப்ரளய தசையிலும் இந்த ப்ரபஞ்சம் ஸத்தாகவே இருந்ததேயானால் இந்த இரண்டு தசைகளுக்கும் வ்யத்யாஸம், என்ன என்றாக்ஷேபம்வரில் ஏகமேவ என்கிற பதம் ஸ்ருஷ்டி தசையைக் காட்டிலும் ப்ரளய தசைக்கு நாமரூப வி[illegible]கிற வ்யத்யாஸத்தைக் காட்டுகிறது என்று தாத்பர்யம்.

1. சாந்தோக்யம்-6-1-7. 2. சாந்தோக்யம்-6-2-1.

186763